# ‘தமிழர் இழந்த உரிமைகளை புதிய அரசு வழங்கும்’

Registered as a News Paper in Ceylon    விலை சதம 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 229
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 12 றஜபு 26 திங்கட்கிழமை (28-9-70)

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப்பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும். தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

## பலாலி வரவேற்பில் அமைச்சர் குமாரசூரியர்

மாவிட்டபுரம், திங்கள்

''அரசியல் சட்ட அமைப்புத்துறைக்குப் பொறுப்பாயிருக்கும் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா நேர்மையானவர் எனவே புதிய அரசியல் சட்டத்தை ஓர் இனத்துக்கு மட்டும் நன்மையளிப்பதாக இல்லாமல் நாட்டிலுள்ள சகல இன மக்களுக்கும் நன்மை அளிக்கும் விதத்தில் அவர் அமைப்பார்''

இவ்வாறு நேற்று பலாலி விமான நிலையத்தில் தபால் தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் தெரிவித்தார்.

பலாலி விமான நிலையத்தில் நேற்று மாலை வந்திறங்கிய அமைச்சர் திரு. குமாரசூரியருக்கு அமோகவரவேற்பளிக்கப்பட்டது, விமானத்திலிருந்து அமைச்சர் இறங்கியதும் அரசாங்க அதிபர் திரு. அமரசேகரா மலர் மாலை அணிவித்து வரவேற்றார்.

அவரைத் தொடர்ந்து பல பிரமுகர்கள் மாலை சூட்டினார்கள்

வட்டுக்கோட்டை எம் பி திரு ஆ தியாகராஜா, கிளிநொச்சி எம் பி திரு வி ஆனந்தசங்கரி நல்லூர் எம் பி திரு சி அருளம்பலம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு துரைராசா, திரு வி பொன்னம்பலம் மயிலிட்டி கிராம சபைத் தலைவர், திரு பற்றிக்ஸ் மேலதிக அரசாங்க அதிபர் திரு சபாரத்தினம், ஆகியவர்களும் அமைச்சரை வரவேற்றார்கள்,

அமைச்சர் வரவேற்புக்கு நன்றி தெரிவித்து மேலும் பேசுகையில், பல்கலைக் கழகங்களில் கலைப்பிரிவை மீண்டும் திறந்ததன் மூலம் அரசாங்கம் பெரிய சாதனை ஒன்றைச் செய்ததென்றும் சட்டக் கலலூரியில் தமிழுக்குரிய சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்:

தமிழ்மக்கள் அரசியல் துறையில்மட்டும் முன்னேறினுற் போதாது, பொருளாதாரத் துறையிலும் முன்னேறவேண்டும். இதற்கான திட்டங்களை அமுல் நடத்த அரசாங்கத்துக்கு தமிழ் மக்கள் பூரண ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இதுகாலவரையும் தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகள் யாவற்றையும் இந்த அரசாங்கம் வழங்குமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கைக்கு

## யு. எஸ். அளிக்கும் கடன் உதவி

கொழும்பு, ஞாயிறு

நீண்டகால அடிப்படையில் இலங்கைக்கு 1 கோடி 40 லட்சம் டாலர் பெறுமதியான கடனுதவியொன்றை அமெரிக்க அரசாங்கம் வழங்கவிருக்கின்றது, இதற்கான உடன்படிக்கை இன்று கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. இந்தக் கடனைக் கொண்டு இலங்கை அமெரிக்காவிடம் கோதுமை மாவை விலைக்குப்பெற்றுக் கொள்ள வசதியேற்படும்.

# “பதிவுப் பிரஜைகளுக்கும் சமசந்தர்ப்பம் வேண்டும்”

## அரசியல் அமைப்பு அமைச்சருக்கு இலங்கை வர்த்தகர் சங்கம் மகஜர்

கொழும்பு. ஞாயிறு

''இலங்கை வம்சாவழிப் பிரஜைகளுக்கும் இலங்கைப் பதிவுப் பிரஜைகளுக்குமிடையில் சகல விஷயத்திலும் புதிய அரசியல் அமைப்பில் சமத்துவம் அளிக்கப்பட வேண்டும்'' என்று இலங்கை வர்த்தகர் சபை புதிய அரசியல் அமைப்புக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கேட்டுள்ளது.

தேசிய அபிவிருத்திக்குப் பதிவுப் பிரஜைகளும் தங்கள் பங்கைச் செலுத்தக் கூடியவகையில் அவர்களுடைய வாழ்க்கை சம்பந்தப்பட்ட சமூக, அரசியல் உட்பட சகல துறைகளிலும் இலங்கை வம்சாவழிப் பிரஜைகளுக்கு உள்ளது போன்று பதிவுப் பிரஜைகளுக்கும் சம சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்று இலங்கை வர்த்தகர் சபை தனது மகஜரில் கோரியுள்ளது.

இந்தியவர்த்தகர் சபை என முன்னர் வழங்கிவந்த இச்சபை இப்போது இலங்கை வர்த்தகர்சபை என வழங்கப்பட்டுவருகிறது.

இலங்கை வம்சாவழிப் பிரஜைகளுக்குப் போலவே பதிவுப் பிரஜைகளுக்கும் நீதியும் நியாயமும் சமவாய்ப்பும் அளிக்கப்பட வேண்டுமென்று இலங்கை வர்த்தகர் சபை கேட்டுள்ளது

## தமிழரசார் இன்று ஆராய்வர்

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழரசுக்கட்சி செயற்குழு இன்று காலை 10 மணிக்கு கட்சித் தலைமைக் காரியாலயத்தில் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமையில் கூடுகிறது.

அரசியல் நிர்ணயசபைக்கு சமர்ப்பிக்கப்படவிருக்கும் அறிக்கை பற்றி தொடர்ந்து ஆராயப்பட்டு முடிவு செய்யப்படும்.

நாளைக் காலை தமிழரசுக் கட்சிப் பொதுச்சபை கூடுகிறது. இக்கூட்டத்திலும் அறிக்கை ஆராயப்படவிருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் தேசியமகாநாட்டை எங்கே நடத்[illegible]தென்பது பற்றியும் நாளை முடிவு செய்யப்படும்.


கிளிநொச்சியில்

## அமைச்சர்களை வரவேற்க பிரமாண்டமான ஏற்பாடு

ஆனையிறவு, ஞாயிறு

கிளிநொச்சித் தொகுதிக்கு இம்மாதம் 30ந் திகதி விஜயஞ்செய்யும் அமைச்சர்களான விளையாட்டுத்துறை அமைச்சர் திரு கே. பி இரத்நாயக்காவையும், தபால் தந்தித்துறை அமைச்சர் திரு. செல்லைய குமாரசூரியரையும் வரவேற்பதற்காகக் கிளிநொச்சித் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமை அலுவலகம் தயாராகிக்கொண்டிருக்கிறது. விளையாட்டுத் துறை அமைச்சர் திரு [illegible] பி. இரத்நாயக்கா கிளிநொச்சித்தொகுதி ஸ்ரீலங்கா சுதந் [illegible]

[illegible]மான முறையில் அமைச்சர்களை வரவேற்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர். கிளிநொச்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமை அலுவலகத்தின் வரவேற்புக் குழுவின் தூதுவர்களாக ஆனையிறவுக் கிளை சார்பில் திரு கே கணபதிப்பிள்ளையும், பரந்தன் கிளை சார்பில் திரு கே தம்பிநாயகமும். தருமபுரக் கிளையின் சார்பில் திரு பிறின்ஸ் எம் ஜே இரத்தினமும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அமைச்சர்களை வரவேற்பதற்காக ஆங்காங்கு ஊர்வலங்களும், இன்னிசைக் கச்சேரிகளும் ஒழுங்குசெய்



மிருசுவில் படித்தபெண்கள் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்தஇருபெண்கள் ‘யன்மா’ இரண்டு சில்லு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆர். டி. சில்வாவுக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கேட்டுள்ளது.

தனது மகஜரில் கோரியுள்ளது.

வேண்டுமென்று இலங்கை வர்த்தகர் சபை கேட்டுள்ளது

தேசியமகாநாட்டை எங்கே நடத்[illegible]தென்பது பற்றியும் நாளை முடிவு செய்யப்படும்.


# இயந்திரங்களிற் சிறந்தது "டீசல்
## டீசலில் சிறந்தது யன்மா "டீசல்"




விவசாயப் போட்டி (15-9-69) முதலாவது இடம் பெற்றது
**யன்மா "டீசல்"**

யாழ் மாவட்ட விவசாய விழா (15-12-69) முதலாவது இடம்பெற்றது
**யன்மா "டீசல்"**

யாழ் மாவட்ட விவசாய உழவுப் போட்டி (1-9-70)
முதலாம் இடமும், இரண்டாம் இடமும் தட்டிக்கொண்டது
**யன்மா "டீசல்"**

பொலிஸ் விழா (7-9-70) முதல் இடம்பெற்றது
**யன்மா "டீசல்"**

**உலகில் மலிந்தது யன்மா டீசல் அல்ல, ஆனல்**
**உலகிற் சிறந்தது யன்மா "டீசல்" இரு சில் டிறுக்டர்**

ஏக விநியோகஸ்தர்கள்:

# "செல்வலக்ஷ்மிஸ்"

யாழ்ப்பாணம் — பரந்தன்.


...சிசுகட்சியின் தலைமை அலுவலகம் தயாராகிக்கொண்டிருக்கிறது. விளையாட்டுத் துறை அமைச்சர் திரு [illegible] பி.இரத்நாயக்கா கிளிநொச்சித்தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிச் செயலாளர் திரு என் எஸ் கே இலட்சுமணனுக்குக் கடித மூலம் அறிவித்ததைத் தொடர்ந்[illegible] இந்தப் பிரமாண்டம[illegible] ஏற்பாடுகளுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைமைக் கிளையின் கீழ் இயங்கும் மற்றும் கிளைகளான தர்மபுரம், பரந்தன், ஆனையிறவுக் கிளைகள் மிகவும் துரித...

...ன்ஸ் எம் ஜே இரத்தினமும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அமைச்சர்களை வரவேற்பதற்காக ஆங்காங்கு ஊர்வலங்களும், இன்னிசைக் கச்சேரிகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. இன்னிசைக் கச்சேரி தமிழ்நாடு சங்கீத பூஷணம் செல்வி இந்திராதேவி கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

அமைச்சர்கள் குறிப்பிட்டு எழுதிய நேர அட்டவணைப்படி தர்மபுரக் கிளைக்குப் பிற்பகல் 3 மணிக்கும், ஆனையிறவுக் கிளைக்கு 4-30 மணிக்கும் விஜயஞ்செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

# பண்டாரநாயக்காவுக்கு தமிழ்நாட்டிலும் அஞ்சலி

சென்னை, செட். 27

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையிலும் காலஞ்சென்ற இலங்கைப் பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர் டி பண்டாரநாயக்காவின் 11-வது சிரார்த்த தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த வைபவத்தில் சென்னை உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. சதாசிவம் பேசுகையில் சோசலிஷ இலட்சியத்துக்காக அயராது தொண்டாற்றிவந்தவர் திரு எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா என்று தெரிவித்தார்.

அச்சத்தை அகற்றி தேசிய ஒருமைப்பாட்டை நாட்டில் ஏற்படுத்தியவர் திரு. பண்டாரநாயக்கா சேமநல அரசை உண்டாக்கப்பாடுபட்டவர் என்று அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார். மாபோதி சங்கத்தைச் சேர்ந்த வண. நந்தீஸ்வர தேரோ பேசுகையில் தேசியத்தையும், தேச ஒற்றுமையையும் நாட்டில் ஏற்படுத்தியவர் பண்டாரநாயக்காஎன்றார்.

இந்தியாவிலுள்ள இலங்கை உதவித் தூதுவர் திரு ஜீ. எவ். பெர்ளு டோ இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்.



மிருசுவில் படித்தபெண்கள் குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த இருபெண்கள் 'யன்மா' இரண்டு சில்லு உழவு இயந்திரத்தின் சேவைகள் பற்றி ஆட்சி மன்ற உறுப்பினர் சிலருக்கு விளக்கம் கூறுகிறார்கள்.

### புதிய அரசியல் அமைப்பில்

# 'நீதித் துறையின் சுதந்திரத்தைப் பேணுக'

## சட்டவல்லுனர்கள் வற்புறுத்தல்

கொழும்பு, ஞாயிறு

புதிய அரசியல் அமைப்பில் நீதித்துறையின் சுதந்திரம் பேணப்படவேண்டும் என்று வற்புறுத்தும் மகஜர் ஒன்றினை சர்வதேச சட்ட வல்லுனர் நிறுவனத்தின் இலங்கைக்கிளை அரசியல் சட்ட அலுவல்கள், அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்லாவிடம் சமர்ப்பித்துள்ளது.

அரசியல் திட்டத்தில் பொதுமக்களின் இனம் வகுப்பு. பால் போன்றவேறுபாடுகளின்மீது பாகுபாடுகள் தவிர்க்கப்பட வேண்டுமென்றும் அடிப்படை உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும் என்றும் மகஜரில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவசரகாலநிலைமை தவிர்ந்த காலங்களில் பத்திரிகைச் சுதந்திரம் பேணப்படவேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டுள்ளது.

# மேலும் இரு கோர்டுகளில் சிங்களம்

கொழும்பு, ஞாயிறு

இரத்தினபுரி, மாத்தறை ஆகிய மாவட்ட நீதிமன்றங்களும் சிங்களத்தில் கருமங்களைச் செய்யவிருக்கின்றன. இதற்கான உத்தரவை நீதியமைச்சர் திரு ஜே எம் ஜயமான்னபிறப்பித்திருக்கிறார்.

ஏற்கனவே, கம்பஹா, குருணாகலை ஆகிய இடங்களில் நீதிமன்றங்கள் சிங்களத்தில் இயங்கிவருகின்றன.

# மைத்திரி தலைமையில் செல்வர்

கொழும்பு, ஞாயிறு

ஹேக்கில் நடைபெறவிருக்கும் சர்வதேத ஆட்சிமன்ற யூனியன் மாநாட்டுக்குச் செல்லும் இலங்கைக் குழுவுக்கு நீர்ப்பாசனம், மின்சார, நொடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்க தலைமைவகிப்பார். இவருடன் பாலாங்கொடை எம். பி திருமதி மல்லிகாரத்வத்தை, கண்டி எம். பி. திரு. ஈ. எல். சேனநாயக்க, செனட்டர் டிக்சன் டி சில்வா ஆகியோரும் போவார்கள்.

### மண்டதீவு கொலை வழக்கு

# 'எதிரி ஓடி வந்து ஒரு தரம் இறந்தவரை குத்தினர்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

'இறந்தவரும் கணநாதபிள்ளையும் கீழே விழுந்து மல்லுப்பிடித்தனர். எதிரி ஓடிவந்து ஒருதரம் இறந்தவரை குத்தினர்'

மண்டதீவு கொலை வழக்கில் சாட்சியமளித்த வே. கணபதிப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினர். இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெட்சர் முன்னிலையில் நேற்று இரண்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் மண்டதீவில் 69-ம் ஜூலை 19-ம் திகதி நாகலிங்கம் வெற்றிவேலு என்பவரை, கந்தையா இரத்தினம் என்பவரை கொலை செய்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் சிற்றம்பலம் நியமிக்கப்பட்டிருந்தார்.

கணபதிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் கூறியதாவது: இறந்தவரும் ஆறுமுகமும் கள்ளுக் கொட்டிலுக்கு வந்து 'அரை'யரை போத்தல் கள்ளு வாங்கினர்கள். பக்கத்திலிருந்த கொட்டிலிலிருந்து குடித்தனர். எதிரி இரத்தினத்தை தெரியும். அவர் பின்னேரம் அங்கு வந்தார் இறந்தவரும் எதிரியும் பாடினர்கள், கணநாதபிள்ளை கள்ளை, இறந்தவர் மீது எத்தினர். இதைத் தொடர்ந்து இறந்தவரும் கணநாதபிள்ளையும் மல்லுப்பிடித்தனர், அப்பொழுது லாம்பு எரிந்து கொண்டிருந்தது இறந்தவர் லாம்பை எடுத்து வீசினர், பின்பு இறந்தவரும் கணநாதபிள்ளையும் மல்லுப்பிடித்தனர். இரத்தினம் ஓடிவந்து ஒரு தரம் குத்தினர், பயத்தால் நான் போய் விட்டேன், அதன்பின் எதிரியும் மற்றவரும் போய்விட்டனர், எதிரி கொட்டிலுக்கு வரும் போது கையில் கத்தி வைத்திருந்தார்.

விசாரணை இம்மாதம் 30-ம் திகதிவரை ஒத்தி போடப்பட்டது.

# இன்று நடனவிருந்து

யாழ்ப்பாணம், திங்கள்

நடனமேதை வழுவூர் ராமையாபிள்ளையின் மாணவிகளான ஸ்ரீகாந்தம் சகோதரிகள் தர்மா, விசாகா சரோஜினி ஆகியோருடைய நாட்டிய விருந்து இன்று மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு புனரமைப்பு திட்டம்!

## வடபகுதி அதிகாரிவிளக்கம்

அம்பன், ஞாயிறு

'தற்போதைய அரசாங்கத்தினால் கூட்டுறவுத் திட்டம் புனரமைப்புச் செய்யப்படவிருப்பதையிட்டு கூட்டுறவாளர்கள் மத்தியில் இப்புனரமைப்புத் திட்டத்தால் கூட்டுறவாளர்களுக்கு சாதகமான விளைவுகள் ஏற்படுமா பாதகமான விளைவுகள் ஏற்படுமா என்ற அச்சம் நிலவிவருகிறது. முன்னைய அரசினால் கூட்டுறவாளனுக்கு வழங்கப்பட்ட எந்தவொரு சலுகையும்இவ் அரசினால் பறிக்கப்படமாட்டாது. கூட்டுறவு இயக்கம் பாட்டாளி வர்க்கத்தினருக்கு புதுவாழ்வளிக்கும் திட்டமே. கூட்டுறவு இயக்கம் பெரும்பாலும் கிராமஅடிப்படையிலேயே துரிதமான முறையில் வளர்ச்சியடைந்து வந்துள்ளது, இலங்கையிலேயே கூட்டுறவு இயக்கம் தீவிரமாக வளர்ச்சியடைந்தஇடம்வடபகுதியேயாகும் இத்தகைய புனரமைப்புத்திட்டத்தினல் மக்கள் அரசிடமிருந்து பெறும் சலுகைகளை வெகுவிரைவில் துரிதமான முறையில் பெறுவதற்கு வழிவகுப்பதேஇத் திட்டத்தின்நோக்கமாகும்.'

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு. எஸ்; குமாரசாமி தலைமையில் சமாச மண்டபத்தில் நடைபெற்ற 11வது வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு சமுகம்கொடுத்தவடபகுதிக்கூட்டுறவுக் காரியாலயப் பரிசோதகர் திரு. ரி. முருகேசு மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

'தற்போதய அரசினல் மேற்கொள்ளப்படவிருக்கும் கூட்டுறவுப் புனரமைப்புத் திட்டத்தின் சிலமுக்கிய அம்சங்களை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன், இப்போதுள்ள சிறு சங்கங்களை ஒன்றிணைத்து பலம் வாய்ந்த பெரிய சங்கங்களாக அமைத்தல், பெரிதாக அமைக்கப்படும் சங்கங்கள் அங்கத்தவர்களின் வசதிக்கேற்ப பல கிளைகளாகஇயங்கும், பொதுவாக உள்ளூராட்சி மன்றங்களின் பகுதிகளே பெரிய சங்கங்களின் தொழிற் பரப்பாக இருக்கும்! ஆனல் மக்கள் தொகை போதியளவு இல்லாதவிடத்து 2 அல்லது அதற்குமேற்பட்ட உள்ளூராட்சி மன்றப் பகுதிகளை ஒரு சங்கத்தொழிற் பரப்பில் சேர்க்க வேண்டி நேரிடும் ப. நோ. கூ. ச, சமாசங்களின் சொத்துக்களும், செல்மதிகளும், உரிமைகளும், சலுகைகளும், ஒப்பந்தங்களும் பெரிய ஆரம்பச் சங்கங்களிடையே பகிர்ந்தளிக்கப்படும், பொது நிருவாக உள்ளூராட்சி விவகார, உள்ளூராட்சி அமைச்சினல் நிறுவப்படவிருக்கும் உத்தேச உள்ளூர் அபிவிருத்திச் சபையினல் நிர்ணயிக்கப்படும் முதன்மைகளுக்கிணங்கவே பெரிய ஆரம்பச் சங்கங்களின் முதலீடுகள் செய்யப்படும் புனரமைப்பினல் பணியாளர்களிடையே ஆட்குறைப்பு நடைபெருது. ஆனல் பணியாளர்சேவையில்சீர் திருத்தங்கள் நடைபெறும் பணியாளர்கள் பதவி உயர்வுக்குவழி வகுப்பதுடன் வேலையற்ரேர் வேலைவாய்ப்புப் பெறுவதற்கும் வழி இருக்கும். பெரியஆரம்பச்சங்க ஊழியர்களுக்கு இடமாற்றச் சேவைஇருக்கும், கூட்டுறவுக் கல்வி பலப்படுத்தப்படும். இத்தகையஉத்தேசமாற்றங்கள் இலங்கை முழுவதும் செயற்படுமுன் சில வழிகாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். புனரமைப்புத் திட்டத்தினை செயற்படுத்துவதின்முதற்கட்டம் இப்போதுள்ள ப. நோ. கூ. ச சமாசங்களின் தலைமை அலுவலகத்திற்கு அருகில் பெரிய சங்கங்களை நிறுவுவதாகும், இத்திட்டம் சம்பந்தமாக அக்கறையுள்ளதனிமனிதர்களோ, சங்கங்களோ தமது கருத்தபிப்பிராயங்களை அரசுக்கு இம்மாதம் 30ம் திகதிவரை தெரிவித்துக் கொள்ளுவதற்கு அவகாசம் கொடுத்திருக்கின்றனர்''

......

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடு பாப்பா.

இரவு6-15இசைப்பயிற்சி, 6-30 மகளிர் அரங்கம், 7-00 மெல்லிசை, 7-15 வயலின், 7-45 திரைகானம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30செய்தித்தொகுப்பு.

......

## வருடாந்த மகாநாடு

மாவனல்லை, ஞாயிறு

அகில இலங்கை அரசாங்க இஸ்லாமிய சங்கத்தின் வருடாந்த மகாநாடு ஒக்டோபர் மாதம் 10-ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது. கல்வியமைச்சர் டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மாமூத் இம்மகாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

## யாழ்.இந்து

உரும்பிராய்

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி—பத்மினி—நாகேஷ் ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ நடித்த
எதிர்காலம்

கடைசிவாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன் — ராஜஸ்ரீ ஜெய்சங்கர்-நிர்மலா- நாகேஷ் நடித்த
பூவா தலையா

The Film ...GREATNESS'

# 'வடபகுதிப் பொருளாதாரம் முன்னேற வேண்டும்'

வேலணை, ஞாயிறு

''வடபகுதி மக்கள் தங்கள் பொருளாதாரத்தை விஸ்தரிக்கும் பொருட்டு தங்கள் பணத்தை தென்னிலங்கையில் முதலீடு செய்கிருர்கள். இதனல் வடபகுதியில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. எனவே வடபகுதி மக்கள் தங்கள் பணத்தை வடபகுதியில் பொருளாதாரத்துறை வளர பயன்படுத்தவேண்டும்''

தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச் சங்கத்தால் வேலணை மத்தியகல்லூரியில் நடாத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு ஆ. தியாகராசா மேற்கண்டவாறு கூறினர்.

''மொழிப்பிரச்னையை இப்போது கிளறி விடுவதால் பயனெதுவுமில்லை. மொழிப்பிரச்னை போன்ற பல பிரச்னைகளை நாம் ஒதுக்கி வைத்துவிட்டு பொருளாதார விருத்தியில் அக்கறை காட்டினல் தான் முன்னேற முடியும்'' எனவும் அவர் தமது பேச்சில் குறிப்பிட்டார்.

தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் பேசுகையில், ''படித்துவிட்டு வேலையற்றிருக்கும் வாலிபர்கள் அரசாங்க உத்தியோகத்தை நம்பிக்கொண்டிராது கமத்தொழில், கைத்தொழிலில் ஈடுபடவேண்டும்'' எனக் கேட்டுக்கொண்டார்.

வேலணை கி. ச. தலைவர் திரு க சதாசிவம் உட்படப் பலர் பேசினர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வட்டு. எம். பி. பரிசு வழங்கினர்.

# 'சட்டங்கள் வெறும் கடதாசிப்பாதுகாப்பாகும்'

பருத்தித்துறை, ஞாயிறு

'ஆட்சி மன்றத்தின் இறைமை என்பதன் பொருள் ஆட்சி மன்றம் தான் நிறைவேற்றும் சட்டத்தின் மூலம் எதையும் சாதிக்க முடியும் என்பதாகும். இன்றைய அரசியல் திட்டத்தை விடுத்து ஒரு புதிய அரசியல் திட்டத்தை உருவாக்கவும், மேற்சபையை ஒழித்துக் கட்டவும் பிரித்தானியப் பொது நல அமைப்பினின்று வெளியேறி எமது நாட்டை ஒரு குடியரசாகப் பிரகடனம் செய்யவும் எமது ஆட்சி மன்றத்திற்குச் சகலஉரிமையும் உண்டு.

இவ்வாறு, கரவெட்டி கிழக்கு முற்போக்கு வாலிபர் சங்கத்தில் நேற்றுமாலை உரை நிகழ்த்திய வழக்கறிஞர் திரு. சிவா பாலேந்திரா கூறினர். திரு. கே. பொன்னையா தலைமை வகித்தார்.

தொடர்ந்து பேசிய திரு. பாலேந்திரா, சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கென அரசியல் திட்டத்தில் இடம்பெறும் சட்டங்கள் வெறும் கடதாசிப் பாதுகாப்புகளாகும். அவற்ருல் எவ்வித பயனும் சிறுபான்மையினருக்கு ஏற்படமுடியாது. சிறுபான்மையினர் பெரும்பான்மையினரின் நம்பிக்கை நல்லெண்ணம், பரஸ்பர நல்லுறவு ஆகியவற்றைப் பெறுவதே சிறந்த பாதுகாப்புகளாகும் என்ருர்.

# இனத்தை இனம் சுரண்டுவதை எதிர்த்தவர் பாரதியார்

## பாரதி விழாவில் பருத்தித்துறை எம்.பி.

உடுப்பிட்டி, ஞாயிறு

'உலக மக்கள் மத்தியில் சுதந்திர பாலத்தை உருவாக்கிக் கடுத்துப் புரட்சியை ஏற்படுத்தியவர் பாரதியார். ஓர் இனம் இன்னெரு இனத்தைச் சுரண்டி வாழ்வதை எதிர்த்துப் போராடிய பாரதியார் எ... வர்களுக்கு முன்மாதிரியாக ... பட்... கும் விடுதலையே சுதந்திரம் என்பது இழக்கு ஐரோப்பிய இலக்கியத்துறையில் அபிவிருத்தி அடைந்துவருகின்றன. தென்னிந்தியச் சஞ்சிகைகள் மீது எமக்குத் துவேஷம் கிடையாது. ஈழத்து எழுத்தாளர்களுக்குப் பேனு பிடிக்கப் பழக்கியது பாரதி. எழுத்துப் ...க்கிய புதுமைப்பித்தன், எமக்கொரு பாரம்பரியம் இருக்கிறது. அதனைப் பரம்பரை ... பேண வாய்ப்புத் ...ருங்களென்றே கேட்கின்றேம். எம் நாட்டு எழுத்...

# விவசாயத்தில் இளம் பெண்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

இம்மாதம் 7-ந் திகதி உருளைக்கிழங்கு உற்பத்தி விசாரணைக் குழுத் தலைவரான உதவி விவசாய காணி அமைச்சர் திரு எச், எம், நவரத்தினவும், பண்டாரவளை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு ஆர் எம் அப்புகாமியும், கம்பளை ஆட்சிமன்றஉறுப்பினர் திரு டி எம் ஜெயரத்தினவும், யாழ். மாவட்ட விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு பொ மாணிக்கவாசகருடன் மிருசுவிலுள்ள படித்த மங்கையர் குடியேற்றத் திட்டத்தை பார்வையிட்டனர். இப்பாலைவனத்தில் திருநெல்வேலி விவசாயப் பாடசாலையில் பயிற்சி பெற்ற ஐம்பது மங்கையர் அயராது விவசாயத்தில் சென்ற மூன்று வருட காலமாக ஈடுபட்டிருப்பதைக் கண்டு ஆட்சிமன்றஉறுப்பினர் ஆச்சரியப்பட்டனர்.

இம்மங்கையரின் குறைபாடுகளை இயன்றளவு தீர்த்து வைப்பதாகவும், நீர்ப்பாசன வசதியுள்ள இடத்தில் ஒவ்வொரு மங்கையர்க்கும் நெற்காணி வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் திரு.நவரத்திம் உறுதியளித்தார்.

அண்மையில் நடைபெற்ற யாழ் மாவட்ட இரண்டு சில்லு இயந்திர உழவுப் போட்டியில் பரிசு பெற்ற செல்வி ஆர். இராசகுமாரி திரு.நவரத்தின அவர்களுக்கு'யன்மா' இரு சில்லு உழவு இயந்திரத்தால் உழுவது மாத்திரமல்லாமல்நீர்ப்பாசனம் செய்யவும், பாரமேற்றி செல்லவும் உபயோகப் படுமென்பதை செயல் முறையில் காட்டினர். அத்துடன் அவர்கள் தாங்கள் சாதிமத வேற்றுமையின்றி யாழ் மாவட்டத்திலுள்ள மற்றைய படித்தமங்கையர்களுக்கு வழிகாட்டியாகவும், இலங்கையை பொறுத்தமட்டில் விவசாயத்தை நவீன முறையில் செலுத்த உற்சாகம் எடுப்பதாகவும்கூறினர் (ந. நி)

''யன்மா'' உழவு இயந்திரத்திற்கு ஆட்சிமன்ற உறுப்பினர் ஒரு பாரமல்ல

# 'மீனவர்களின் பரிதாப நிலைமை மாற வேண்டும்'

முசலி, ஞாயிறு

'கடற்ருெழில் செய்து வாழும் மீனவர்களின் வாழ்க்கை மிகவும் பரிதாபகரமானது. அவனுக்கு சுகவாழ்வுவாழ சுகாதார வசதி கொண்ட வீடுகள் இல்லை. தங்கள் பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு தகுந்த கல்வி நிலையங்கள் கிடையாது. அவர்கள் மிகவும் கஸ்டப்பட்டு நெற்றி வேர்வை கடலில் விழ ஆழ்கடலில் சென்று பிடிக்கும் மீன்களுக்கு கரை வந்ததும் உத்தரவாத விலை கிடையாது. ஆனல் அவன் பிடிக்கும் மீன்களை சொற்ப விலைக்கு வாங்கி, அதிக விலைக்கு விற்று வாழும் வியாபாரிகள் தான் நிம்மதியாக வாழ்கின்ருர்கள், இதேவேளையில் ஏழை மீன்பிடித் தொழிலாளி பஞ்சத்தால் வாடி பரிதவிக்கின்ருன். இந்தநிலைமை மாறி மீன்பிடித் தொழிலாளராகிய நீங்கள். மேலைத்தேய மக்களைப்போல் மீன்பிடித் தொழிலின் மகத்துவத்தை உணர்ந்து, உங்கள் சமூக, சமுதாய, பொருளாதார. ஏனைய அம்சங்களில் முன்னேற ஒன்றுபட்டு உழைப்பீர்களேயானல் உங்கள் வாழ்வு சோலைவனமாக காட்சியளிக்கும்'.

சமீபத்தில் மன்னர் மாவட்ட கடற்ருெழில் சங்கங்களின் விழாவின் போது மன்னர் மாவட்ட கடல் தொழில் அதிபர் திரு என். எஸ்.எம் கவுத் மேற்கண்டவாறு கூறினர்.

இந்த விழாவுக்கு முள்ளிக்குளம் தொடங்கி தலைமன்னர் ஈருகவுள்ள கடற்ருெளிலாளர் சங்கப் பிரதிநிதிகள் சமூகமளித்தார்கள்.

மன்னர் மாவட்ட கடற்ருெழிலாள சங்க கூட்டுறவுப் பகுதி மீன்பிடி இலாகாப் பரிசோதகர் திரு எல். பி.பிலிப்பும்பேசினர்.

க. தம்பையா, திரு. சி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும், இதனை எதிர்த்து திரு. தெணியான், திரு. சி. தர்மகுலசிங்கம், திரு. சி. செல்லச்சாமி ஆகியோரும்

## கோரிக்கை

சங்கானை, வெள்ளி

மக்கள் வங்கிக் கிளை ஒன்றை நிறுவும்படியும் சங்கானையில் உள்ள மகா வித்

# நெல்லியடி பட்டினசபை தீர்மானங்கள்

பருத்தித்துறை, ஞாயிறு

நெல்லியடிப் பட்டினசபை வரியிறுப்பாளர் சங்கக் கூட்டம் நேற்றுமுன்தினம் தலைவர் திரு. க. சிவராசா தலைமையிற் கூடியகிபாது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன;

0 இப்பொழுது நிலவும் வீட்டுவரிகள் பட்டினசபை உறுப்பினர் உட்பட்ட ஒரு குழுவினல் புனர் மதிப்பீடு செய்யப்பட்டுத் திருத்தப்படல் வேண்டும்.

0 பனங்காணிகள், தோட்டக்காணிகள் ஆகியவற்றுக்கான வரிகள் நீக்கப்படல் வேண்டும்.

0 தியேட்டர்களுக்கான வரிகள் அதிகரிக்கப்படல் வேண்டும்.

0 இந்தியக் கோயில்களுக்குச் சொந்தமான காணிகளில் நிலமற்ற மக்கள் குடியிருத்தப்படல் வேண்டும்.

## 10 லட்சம் ரூபா செலவாகும்

கொழும்பு, ஞாயிறு

மக்களுக்கு பங்கீட்டரிசிப் புத்தகங்களுக்கு திரும்பவும் இரண்டு படி அரிசி வழங்குவதால் அரசாங்கத்துக்கு வருடாவருடம் 10 லட்சம் ரூபா செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு வருடத்துக்கு 1,100,000 தொன் அரிசியும் தேவைப்படும்.

இதில் 500,000 தொன் அரிசியை உள் நாட்டில் பெறுவது எனவும் மீதியை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. சீனுவிடமிருந்து 350,000 தொன் அரிசியும், பாகிஸ்தானிடமிருந்து குறிப்பிட்ட ஒரு தொகை அரிசியும் வாங்குவதற்குஅரசாங்கத்தினல்ஏற்கனவேஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளது. (சி பி. ஏ.)

## 'குத்துவிளக்கு' செல்வச்சந்நிதியில் படப்பிடிப்பு ஆரம்பம்

இமையாணன், ஞாயிறு

தொண்டமானறு செல்வச்சந்நிதி கோவிலில் ஈழத்துக் கலைஞர்களைக் கொண்ட கட்டடக் கலைநிபுணர் திரு. வி. எஸ். துரைராசா தயாரிக்கும் 'குத்துவிளக்கு'ப் படப்பிடிப்பு ஆரம்பமாகியது.

விசேட பூசையொன்றின் பின்னர், கோயிலுக்குச் செல்வது போன்ற காட்சி படமாக்கப்பட்டது. ஈழத்து ரத்தினம் இப்படத்துக்கான ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திணசரி 4 காட்சிகள் நடித்த

# பூவா தலையா

The Film
**'PORTRAIT OF GREATNESS'**
in ENGLISH depicting the life Story of the late
Mr, S. W. R. D. BANDARANAIKE
(50 minutes duration) will be shown from
24th to 30th SEPTEMBER at WINDSOR daily at
6 P. M. and at REGAL daily at 4 and 9-30 P.M.

**REGAL JAFFNA**
Daily 4 Shows
LEE MARVIN, BURT LANCASTER,
CLAUDIA CARDINALE in
**THE PROFESSIONALS**
[ADULTS]

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
**வெலிங்டன்** யாழ்நகர்
(2-30, 6-30, 9-30)
தாய்க்குலத்தின் பெருமைக்கும்! தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஒவியம் . . .



ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்
# துலாபாரம்
(தமிழ்)
★ ஏ.வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

டில் பிரதம விருந்தினரா கக் கலந்து கொள்வார்.

## யாழ்.இந்து உரும்பிராய் மோதல்

திருநெல்வேலி, ஞாயிறு யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் உரும்பராய் இந்துக்கல்லூரிக்கும், யாழ் இந்துக் கல்லூரிக்கும் இடையே சினேக பூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் முதல் பிரிவிற்கான போட்டியில் உரும்பிராய் இந்துக் கல்லூரிக் கோஷ்டி யாழ்.இந்துக் கல்லூரி கோஷ்டியை 3-0 கோல்களால் தோற்கடித்தது.

அதே தினத்தில் இரண்டாம் பிரிவுக் கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற மோதலில் யாழ் இந்துக் கல்லூரிக் கோஷ்டி உரும்பிராய் கோஷ்டியை 3-0 கோல்களால் வெற்றி பெற்றது.

## லூனா-16....

(3-ம்பக்கத்தொடர்ச்சி)

பிரபஞ்சத்தை ஆராய்வதில் தன்னியக்க நிலையங்கள் வகிக்கும் விசாலமான முக்கியத்துவத்தை 'லூனா-16' தன்னியக்க நிலைய ஆய்வின் வெற்றி எடுத்துக்காட்டுகிறது. மனித வர்க்கம் அற்புதமான கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளும்புதியதொரு கட்டம் ஆரம்பித்துவைக்கப் பட்டுள்ளது என்றார்.

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
என்.ரி. ராமராவ்-ஜெயலலிதா நடித்த
விடாக் கொடாக் **கண்டன்**

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா ,பிரீபோயா 2-30
ஜெய்சங்கர்—நிர்மலா நடித்த
**காதலித்தால் போதுமா?**

**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
மாலாசின்கா-விஜயகுமார் நடித்த
**திலகி**
(DILAGI)
(ஹிந்தி)

ஒரு இளைத்தைச் சாண்டி வாழ்வதை எதிர்த்துப் போராடிய பாரதியார் எ...வர்களுக்கு முன்மாதிரியாக விளங்குகிறார். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ...க்கும் விடுதலையே சுதந்திரம் என்பது கிழக்கு ஐரோப்பிய நா..களும், பல பொதுவு...ம நாடுகளும் ஒரே நாடாகஇராமல்தனித் தனி நாடாக இருப்பதுவே சுதந்திரம்''

இவ்வாறு பருத்தித்துறை எம். பி திரு. கே. துரைரத்தினம், திக்கம் இளைஞர் கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட இலக்கிய விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். ஆசிரியர் திரு. க. அருளம்பலம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

பருத்தித்துறை எம். பி மேலும் பேசுகையில் ''நாம் பொருளாதார சுபீட்சம் சுரண்டப்பட்ட நிலையில் வாழுகின்றோம் வேலையில்லாத இளைஞர்கள் விடயத்தில் நான் பயப்படுகிறேன். எம். பி. என்ற முறையிலேயே நான் இப்பிரச்னைக்குப் பொறுப்பாளி. ஆனால் தனிப்பட்ட முறையில் எவருக்கும் உத்தியோகம் தருவேனென்று சொல்லவில்லை இந்த நாட்டில் வாழும் அத்தனை பேரும் சமம். ஐரோப்பிய நாடுகளில் பெண்கள் அதிக நேரம் உழைக்கின்றனர். ஆனால் எமது பெண்கள் முழு நேரமும் அடுப்படியிலேயே தமது நேரத்தைச் செலவிடுகின்றனர்'' என்று கூறினார்.

திரு. டொமினிக் ஜீவா பேசுகையில் குறிப்பிட்டதாவது: ''கிராமங்கள், அறிவு பெற பிடிக்கப் பழக்கியது பாரதி. எழுத்துப் ...க்கியது புதுமைப்பித்தன். எமக்கொரு பாரம்பரியம் இருக்கிறது. அதனைப் பரம்பரை ...... பெற வாய்ப்புத் தாருங்களென்றே கேட்கின்றோம். எம் நாட்டு எழுத்தாளர்கள் அற்புத...ன இலக்கியங்களைப் படைக்கக் கூடியவர்கள். மனித சிந்தனை நுட்பமானது.''

திரு. ஆ. அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் தென்னிந்திய சஞ்சிகைகளால் ஈழத்தின் இலக்கிய வளர்ச்சி பாதிக்கப்படுகிறது என்று திரு. க. மனோகரன், திரு. க. தம்பையா, திரு. சி. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும், இதனை எதிர்த்து திரு. தெணியான், திரு. சி. தர்மகுலசிங்கம், திரு. சி. செல்லச்சாமி ஆகியோரும் வாதிட்டனர்.

மேலல்வையூர் ஆ. பொன்னையா தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை, பல்கலைக்கழக மாணவரும் இளம் கவிஞருமான கருணையோகன், அல்வை த. சுந்தரன், இளம் கவிஞர் க. தர்மபதி ஆகியோர் பங்குபற்றினர்.

மாறி மீண்டித் தொழி

## 'நல்வாழ்வுக்கு அதிகாரம் பயன் படுத்தப்பட வேண்டும்'

பருத்தித்துறை. ஞாயிறு ''1965ம் ஆண்டு இந் நாட்டின் சமுதாய முன்னேற்றம் ஓடும் நதிபோலப் பிரவாகத்துடன் ஓட ஆரம்பித்துவிட்டது. சில வேளைகளில் நதியைத் திசைதிருப்பக் கூடும். ஆனால் உலகில் எந்த சக்தியாவது அதைப் பின்னோக்கிச் செல்லுமாறு செய்ய முடியாது. அந்தத் தடுக்க முடியாத முன்னேற்றத்தைத் தொடக்கிவைத்த பெருமை காலஞ்சென்ற பிரதமர் திரு.எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவுக்குரியது'.

இவ்வாறு நேற்றுப் பிற்பகல் துன்னாலையில் நடைபெற்ற பண்டாரநாயக்கா நினைவுதினக் கூட்டத்தில் உரையாற்றிய கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. பொன். குமாரசாமி கூறினார். திரு. கே எஸ். சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து பேசிய திரு குமாரசாமி 'எமது நாட்டில் முன்னெப்பொழுதுமில்லாதவாறு சோஷலிச சக்திகளின் ஒற்றுமை இன்று மிக அவசியமாகத் தோற்றுகிறது. அதிகாரத்தைப் பெற்றுவிட்டதுடன் திருப்தியுறாது, அவ்வதிகாரத்தை மக்களின் நல்வாழ்வுக்கு உபயோகித்தல் தான் சிறந்த அரசியல்நெறி' எனக் கூறினார்.

திருவாளர்கள் வீ. செல்லையா, கே.இராசரத்தினம், எஸ். விஜயானந்தம் ஆகியோரும் பேசினர்.

காப் பரிசோதகர் திரு எல். பி. பிலிப்பும்பேசினர்.

## கோரிக்கை

சங்கானை, வெள்ளி மக்கள் வங்கிக் கிளை ஒன்றை நிறுவும்படியும் சங்கானையில் உள்ள மகா வித்தியாலயத்திற்கு ஆய்வு கூடமொன்றை உடன் அமைத்துத்தரும் படியும் சங்கானை பட்டின அபிவிருத்திச் சபை சம்பந்தப்பட்ட அமைச்சுகளை கோரியுள்ளது. இவ்விடயங்களில் துரிதப் படுத்துவதற்காகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கொழும்பில் சந்தித்து விடயங்களை செயற்படுத்துவதற்காக இருவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

......

## யாருடையது?

யாழ்ப்பாணம், திங்கள் ஜி.ஸி.ஈ (சாதாரண) பரீட்சையில் சித்தி பெற்ற சான்றுப் பத்திரம் ஒன்று யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் த.வல்லிபுரம் என்பவரால் கண்டெடுக்கப் பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் ஈழநாடு காரியாலயத்தி பெற்றுக் கொள்ளலாம்.

வி. எஸ். துரைராசா தயாரிக்கும் 'குத்துவிளக்கு'ப் படப்பிடிப்பு ஆரம்பமாகியது. விசேட பூசையொன்றின் பின்னர், கோயிலுக்குச் செல்வது போன்ற காட்சி படமாக்கப்பட்டது. ஈழத்து ரத்தினம் இப்படத்துக்கான கதை வசனம் பாடல்களை எழுதியுள்ளார்.

## வருடாந்தக் கூட்டம்

புதுக்குடியிருப்பு, ஞாயிறு புதுக்குடியிருப்பு ப நோ. கூ. சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 25ந் திகதி மேற்படி சங்க மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் வடபகுதி கூட்டுறவு உதவி ஆணையாளர் கலந்துகொண்டார்.

## ஆண்டு விழாவும் இசைவிழாவும்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ். சைவ முன்னேற்றக் கழகத்தின் 2-வது ஆண்டு விழாவும் இசை விழாவும் அக்டோபர் மாதம் 1-ம் திகதி தொடக்கம் 10-ம் திகதிவரை நடைபெறவிருக்கின்றது.


இன்று முதல் ஆரம்பம்!
**ராஜா - யாழ்ப்பாணம்**
10-30, 2-30, 6-30, 9-45
**சரஸ்வதி** (திருக்கோணமலை) 2-30, 6-30, 9-30
**ஸெயின்ஸ்தான்** (கொழும்பு) 10-30, 2-30, 6-30, 9-30
**கண்ணன் — ராதிகா**
தேங்காய் சீனிவாசன்
மற்றும் பலர் நடித்த
# ஒரு விரல்
(ஒரு மர்ம சித்திரம்)
(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)



புத்துணர்ச்சி தரும் மனோரம்மியமான குடும்ப டல்க்
**ரெமி**




வர்த்தகவிசாரணைகளுக்கு:-
அவ்ரா அன் கம்பெனி
19, செட்டியார் தெரு
கொழும்பு ,11
தொலைபேசி: 27211.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரபுக் கொமாண்டோக்களால்

# பணயம் வைக்கப்பட்ட பிரயாணிகள் அனைவரும் விடுதலை?

## நாஸருடன் நேரில் பேச மன்னர்ஹுசேன்கெய்ரோவிஜயம்

கெய்ரோ, செப். 27

**ஜோர்டான் மன்னர் ஹுசேன் விமான மூலம் ஐ. அ. குடியரசுத்தலைவர் நாசருடன் பேச்சுவார்த்தை நடத்த கெய்ரோவுக்குச் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.**

**ஜோர்டானிய பாலைவனத்தில் வைக்கப்பட்டிருந்த பிரயாணிகள் 32 பேரும் அம்மானிலுள்ள எகிப்திய தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் சுதந்திரமாக உள்ளனர் எனக் கெய்ரோ செய்திகள் தெரிவிக்கின்றன.**

ஜோர்டானில் ஏற்பட்ட யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி ஜோர்டானில் நிரந்தர சமாதானத்தை உருவாக்கஅரபுத் தலைவர்கள் முயற்சிசெய்கின்றனர். இது பற்றி ஆராய செவ்வாய்க்கிழமை அரபுத்தலைவர்கள் கெய்ரோவில் கூடவிருக்கின்றனர்.

ஜோர்டான் மன்னர் ஹுசேன் ஐ அ. குடியரசுத் தலைவர் நாசருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டார். இதைத் தொடர்ந்து மன்னர் ஹுசேன் நாசருடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த கெய்ரோவிற்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. அரபுக்கொமாண்டோக்களின் தலைவர் அரபாத்தும் இப்பொழுது கெய்ரோவில் இருக்கின்றார். அவரும், மன்னர் ஹுசேன் நாசருடன் பேச்சுவார்த்தை நடத்தும்பொழுது, அப்பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளக்கூடும் என கெய்ரோவில் உள்ள அரசியல் அவதானிகள் கூறினர்.

அரபு நாடுகளில் தனக்கெதிராக வெளியிடப்பட்டு வரும் கருத்தையிட்டு வேதனை அடைவதாக பி. பி. சி. தொலைக்காட்சிப் பேட்டியில் மன்னர்

...டோக்கள் அம்மானில் உள்ள எகிப்திய தூதரகத்திடம் ஒப்படைத்திருப்பதாகவும், அவர்கள் சுதந்திரமாக உலவுகின்றதாகவும் கெய்ரோவில் உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### செய்திக்கு மறுப்பு

ஐரோப்பா, பிரிட்டன் இஸ்ரேல் ஆகிய நாடுகளில் சிறைவைக்கப் பட்டிருக்கும் பிரிட்டனில் கைதியாக இருக்கும் லைலா காலித் உட்பட, பாலஸ்தீனக் கொமாண்டோக்களை கெய்ரோ விமான நிலையத்தில் வைத்துக் கைமாறுவதற்காகவே இம் 32 பிரயாணிகளும் அம்மானிலுள்ள தூதரகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்கள் என்று முன்பு வந்த செய்தியை இவ்வதிகாரி மறுத்தார்.

ஐரோப்பா, பிரிட்டன். இஸ்ரேல் ஆகிய நாடுகளில் உள்ள பிரிட்டனில் இருக்கும் லைலா காலித் உட்பட அரபுக் கொமாண்டோக்களை விடுதலை செய்வதற்கு அவ்வவ்வர சாங்கங்களிடமிருந்தும் உறுதி பெற்றுத்தரவேண்டுமென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் பாலஸ்தீனமக்கள் விடுதலை முன்னணி கேட்டுள்ளதாக

தாய்லாந்தில்

### கம்யூனிஸ்ட்மீது தாக்குதல்

பாங்கொக், செப். 27

தாய்லாந்து நாட்டின் வடக்கு, வடகிழக்குப் பகுதிகளில் உள்ள கம்யூனிஸ் கொரில்லாக்கள் மீது தாய்லாந்து இராணுவம் கடும் தாக்குதல் நடத்தியது.

தாய்லாந்திலுள்ள மாகாணக் கவர்ணர் உட்பட மூன்று உயர்தர அதிகாரிகள் கொல்லப்பட்டதை அடுத்தே அரசாங்கம் இந் நடவடிக்கையை எடுத்துள்ளதாக அரசாங்கச் செய்திகள் தெரிவித்தன.

— —

ஹீத் அரசாங்கத்திற்கு

### தொழிற்கட்சி கண்டனம்

லண்டன், செப். 27

இன ஒதுக்கல் கொள்கையுடைய தென் ஆபிரிக்க அரசாங்கத்திற்கு ஹீத் தலைமையிலான கொன்சர்வேட்டிவ் அரசாங்கம் ஆயுதங்கள் கொடுப்பதென்ற முடிவை பிரிட்டிஷ் லிபரல் கட்சி மிக

### 'அறிவுக் கண் அளிப்பவர்கள்'

உடும்பராய், ஞாயிறு

''ஆசிரியர்கள் நாட்டின் கண்களைப் போன்றவர்கள். இளம் சந்ததியினருக்கு அறிவுக் கண் கொடுப்பவர்கள் அவர்கள். திருமதி சண்முகதாசன் சரோஜினி உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் ஆற்றிய சேவை மகத்தானது'' என உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணிபுரிந்து இங்கிலாந்து செல்லவிருக்கும் திருமதிசண்முகதாசன்சரோஜினியின் பிரிவுபசாரவிழாவிற் பேசிய சிரேஷ்ட ஆசிரியை திருமதி தங்கமணி இராமுப்பிள்ளை குறிப்பிட்டார்.

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் நடைபெற்ற இவ் விழாவுக்கு வித்தியாலய அதிபர் திரு. கு. சபாரத்தினம் தலைமை தாங்கினார்.

திருவாளர்கள் க. இ. சரவணமுத்து, மு. நல்லையா ச கதிரவேலு, அ. பஞ்சாட்சரம் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினர்கள்.

— —

### நீதிபதிகளுக்கு மேலதிக கார்

கோட்டை, ஞாயிறு

நீதியரசர் உட்பட பதினொரு நீதிபதிகளுக்கு அவர்களது உத்தியோக பாவனைக்கு 4 கார்களே உள்ளன இவை இவர்களுக்குப் போதாமையால் மேலும்ஒரு கார் தேவைப்படுவதாக அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிகமாக ஒரு காரை வாங்குவதற்கு நிதியமைச்சு 12030 ரூபா செலவு செய்ய விருப்பதாகத் தெரியவருகிறது.

இந்திய

### இலக்கிய கர்த்தாவுக்கு மாஸ்கோவில் விழா

மாஸ்கோ, செப். 27

''பிரேம்சந்த் கோபுரத்தின் விருந்து இலக்கியம் படைக்கவில்லை. மக்களோடிணைந்து தாய் நாட்டின் விடுதலைக்காகவும் போராடினார். ஆகவேதான் அவர் வைத்துச் சென்ற பொக்கிஷம் அவர் வாழ்ந்தமுறையாகவுள்ளது அடக்கியொடுக்கப்பட்ட சாதாரண மக்களின் விமோசனத்தை பறைசாற்றி நிற்கின்றன அவருடையபடைப்புகள்'' என்று செலிஷேவ் கூறினார்.

இந்திய இலக்கிய கர்த்தா பிரேம் சந்தின் 90-வது தின விழாவை சோவியத் இந்திய கலாச்சார கழகமும், அயல்மொழி இலக்கிய அரசாங்க அனைத்து யூனியன் நூலகமும் மாஸ்கோவும் நடத்தின.

மாஸ்கோ நட்புறவு மாளிகையில் கூட்டம் நடைபெற்றது.

''பிரேம்சந்த் இந்திய மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தின் ஜோதியாகவும், இன்றைய எழுத்தாளர்களுக்கு ஆசானாகவும் இருந்தார்'' என்று பிரபலஇந்தியவியல் அறிஞர் எவ்ஜனி செலிஷேவ் மேலும் கூறினார்.

இந்திய தூதுவராலயத்தின் ஆலோசகர் எ. கே. தாமோதரன் இந்திய எழுத்தாளர் எம். எம் லால். இந்திய நூல் அகாடமியின் உப-தலைவர் சுரேஷ் அவஸ்தி ஆகியோரும் உரையாற்றினர்.

— —

### சோவியத் கலைக்களஞ்சியம்

மாஸ்கோ, செப். 27

30 தொகுதிகளடங்கிய சோவியத் கலைக்களஞ்சியத்தின் இரண்டாவது தொகுதி வெளியாகிவிட்...

...களில் ஏற்பட்ட சகல மாற்றங்களையும் பிரதிபலித்துள்ளது. இக்கலைக்களஞ்சியம்...

### பஞ்சசீலக்கொள்கை மாற்றமுடியாத உண்மை

மாஸ்கோ, செப். 27

''குறிப்பிட்ட சர்வதேச ஒழுங்கு நடத்தை மாத்திரமே உலகில் ஸ்திரமான சமாதானத்தை உத்தரவாதம் செய்ய முடியும் என்று எம்மிரு நாடுகளும் நம்புகின்றன. சமாதான பஞ்சசீலக் கொள்கை மாற்ற முடியாத உண்மையாக திகழ்கிறது. இதை உறுதியாக கடைப்பிடிப்பதன் மூலமே சர்வதேச அழிவை தடுக்க முடியும்'' என்று இந்திய ஜனாதிபதி வி. வி. கிரி சோவியத் ஜனாதிபதி நிகோலாய் பொட்கார்னிவழங்கிய விருந்துபசாரத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் இக்கோட்பாடுகள் மீறப்படும்போதே நெருக்கடிகள் தோன்றுகின்றன.

இவைகளுக்கு வியட்னாமும் மேற்கு ஆசியாவும், ஆபிரிக்க காலனிகளும் உதாரணமாகும் என்றார்.

... ...

### கோழிகள் கொலை?

மட்டுவில், ஞாயிறு

மட்டுவில் விளைவேலியைச் சேர்ந்த விவசாயி ஒருவர், நெல்லுடன் கிருமிநாசினியைக் கலந்து, தமது வயலுக்கு அடுத்தாற்போலுள்ள வளவு வேலியுடன் தூவியிருந்ததைத் தொடர்ந்து இந்த நெற்களையுண்ட சுமார் 75 கோழிகள் ஸ்தலத்திலேயே சுருண்டு விழுந்திறந்தனவாம். பலியான கோழிகளின் உரிமையாளர்கள் இதுபற்றிப் பொலிஸில் புகார் செய்துள்ளனர்.

## லூனா-16 வெற்றி.....

லெனின்கிராட், செப். 27

'லூனா-16' தன்னியக்க நிலையம் சந்திர மேற்பரப்பில் மெதுவாக இறங்கியதும், சந்திரக் கற்பாறைகளைச்சேகரித்ததும், திரும்பி பூமிக்குக் கிளம்பி வந்ததும் அண்டவெளியை ஆராய்வதில் அற்புதமானதோர் புதிய கட்டத்தைக் குறிக்கிறது என்றே கொள்ள வேண்டும் என சோவியத் விஞ்ஞானப் பேரவையின் தத்துவ வானவியல் நிலைய டைரக்டர் பேராசிரியர் கிளெப் கபொட்டரெவ் தெரிவித்துள்ளார்.

### ரஷ்ய விஞ்ஞானி பெருமிதம்

இத்தகைய மாபெரும் சாதனையை ஈட்ட தன்னியக்க அமைப்பில் மகத்தான முன்னேற்றத்தைக் கண்டிருப்பதும், சந்திர மேற்பரப்பு, சந்திர ஈர்ப்பு வட்டம் ஆகியன பற்றி மிகச்சரியான கணிப்புகளைக் கொண்டிருப்பதும் அவசியமாகும் இதற்குத் தேவையான தனைத்தும் சோவியத் விஞ்ஞானிகளிடம் உள்ளன என்பதை 'லூனா-16' தன்னியக்க நிலையத்தின் அனுபவம் எடுத்துக்காட்டியுள்ளது 'லூனா-16' தன்னியக்க நிலையத்தின் பிரயாணத்திற்குப் பயன்படுத்தப்பட்டது போன்ற தன்னியக்க அமைப்பு விஞ்ஞானத்தின் முன்னால் மாபெரும் வாய்ப்புக்களைத் துவக்கி வைக்கிறது.

விண்வெளிப்பிரபஞ்சத்தை ஆராய்வதில் மேற்கொள்ளப்பட்ட முதல்நடவடிக்கைகள் முன்னர் எதிர்பார்த்ததிலும் பார்க்க ஏனைய கிரகங்கள் 'உபசாரம்' குறைந்தவை என்பதை எடுத்துக்காட்டின, சந்திரன் மனிதனை வரவேற்றது என்றால், செவ்வாய்க் கிரகத்திற்கும் பிரயாணத்தை மேற்கொள்ளும் போது இத்தகைய வாய்ப்பு. இருந்தாலும் கூட ஏனைய கிரகங்கள் மனிதனை வரவேற்க போவதில்லை என்பதை சமீபத்திய விஞ்ஞான ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

என்றாலும் இவற்றுக்கான பாதைகள் மிகவளர்ச்சியுற்ற தன்னியக்க அமைப்புகளாலேயே அமைக்கப்படும். இதனால் தான் எங்கள் நாடு விண்வெளியை தன்னியக்க நிலையங்கள் மூலம் ஆராய்வது புறவெளி மர்மங்களை அறிவதற்கான உறுதியான வாய்ப்பினை அளிக்கிறது என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

'லூனா-16' தன்னியக்க நிலையத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு எடுத்துக்காட்டுகிறது. சந்திர மேற்பரப்பில் இந்தத் தன்னியக்க நிலையத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்கள் சந்திரனின் வடிவம், அதன் ஈர்ப்பு வட்டம் ஆகியன குறித்து மேலும் முக்கியமான செய்திகளை அறிய உதவும். இது புதிய பிரயாணங்களுக்கான மிகச் சரியான சுழல் பாதைகளைக் கணிக்க உதவும். சந்திர நிலப்படத்தை உருவாக்கவும் இது பெரிதும் உதவும்.

சந்திரனையும் செவ்வாய்க் கிரகத்தையும், ஆராய்வது வானவியலாளர்களுக்கு விசேஷ முக்கியத்துவமும் மிக்கதாகும் என்று பேராசிரியர் மேலும் சொன்னார். சூரிய அமைப்பின் தோற்றம் உட்பட இன்னமும் தீர்க்கப்படாதுள்ள பல முக்கிய பிரச்னைகளுக்குத் தீர்வு காண இந்த ஆய்வுகள் பெரு முக்கியத்துவம் மிக்கவையாகும். சமீபத்திய கிரகங்கள் பற்றிய மிக விரிவான ஆய்வுகள்தான் இந்தக் கேள்விகளுக்கு இறுதி விடை காண வழிவகுக்கும். இதனால்தான் சூரிய கிரகத்தை ஊடுருவி ஆராயும் 'ஆய்வாளன்' பாத்திரம் தன்னியக்க அமைப்புகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனால்தான் விண்வெளியை ஆராய்வதில் தன்னியக்க நிலையங்களைவிருத்தி செய்வது மேலும் முக்கியத்துவத்தைப் பெறுகிறது. ஆராய்வதில் தன்னியக்க சாதனங்களின் பாத்திரமும் பெரு முக்கியத்துவமுடையதாகும்.

'வீனஸ்-7' இப்போது சுக்கிரன் நோக்கிச்சென்று கொண்டிருக்கிறது. இந்தத் தொலை தூரத்துக்கிரகத்தை ஆராய்வதில் இந்த நிலையம் சிறந்த பணிகளை நிறைவேற்ற இருக்கிறது.

(2-ம் பக்கம் பார்க்க)

### இன்றைய பலன்

புரட்டாதிமாதம்12-ம்திகதி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அவதானிகள் கூறினர்.

அரபு நாடுகளில் தனக்கெதிராக வெளியிடப்பட்டு வரும் கருத்தையிட்டு வேதனை அடைவதாக பி. பி. சி. தொலைக்காட்சிப் பேட்டியில் மன்னர் ஹுசேன் தெரிவித்ததாகச் செய்திகள் கூறுகின்றன. மேலும் ஜோர்டானிய மக்களின் ஆதரவுதனக்கு இருப்பதாகவும் அவ்வாதரவு இருக்கும்வரை தனது அரசு நிலைத்திருக்கும் எனவும், பாலஸ்தீனிய மக்களுக்கு மட்டுமல்ல, அராபிய மக்களுக்கு எதிராகவும் தான் செயல்புரியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டதாகத் தெரிவித்துள்ளது

## 32 பிரயாணிகள் விடுதலை

பாலஸ்தீனக் கொமாண்டோக்களினால் திசை திருப்பப்பட்ட விமானங்களில் பிரயாணஞ்செய்து, ஜோர்டானிய பாலைவனத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த மிகுதி 32 பிரயாணிகளையும் பாலஸ்தீனக் கொமாண்

களை விடுதலை செய்வதற்கு அவ்வவ்வர சாங்கங்களிடமிருந்தும் உறுதி பெற்றுத் தரவேண்டுமென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் பாலஸ்தீனமக்கள் விடுதலை முன்னணி கேட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வழக்கறிஞர் சங்கம் கருத்து

ஐ. நா. தீர்மானத்துக்கிணங்க ஆக்கிரமித்த அரபு நாடுகளிலிருந்து இஸ்ரேல் வாபசாக மறுத்ததே ஜோர்டானின் இன்றைய நெருக்கடிக் குரிய பிரதான காரணமாகுமென சர்வதேச ஜனநாயகவழக்கறிஞர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## புதிய அரசு

இதற்கிடையில் திடீர் ராஜிஞமாச் செய்தபிரிகேடியர் தாவுத்துக்கு பதிலாக புதிய அரசொன்றை மன்னர் ஹுசேன் நியமித்திருப்பதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் கூறுகின்றன இவ்வரசில் 6 இராணுவத் தலைவர்கள் அங்கம் வகிப்பதாகத் தெரிகிறது'

உத்தரபிரதேச

# முதலமைச்சருக்கு நி. காங்கிரஸ் ஆதரவு

புதுடில்லி, செப் 27 உத்தரப்பிரதேச முதல் அமைச்சர் சரண்சிங்கிற்கு ஜனசங்கம், சுதந்திரா, நிஜலிங்கப்பா காங்கிரஸ் ஆகியன தமது ஆதரவைத்தெரிவித்துள்ளன.

ஜனசங், சுதந்திரா, நிஜலிங்கப்பா காங்கிரஸ் ஆகியவற்றின் ஆதரவு தனக்கிருப்பதால், தான் எவ்வாறு சிறுபான்மையாக முடியும் என சரண்சிங் கோபாலரெட்டியிடம் கேட்டுள்ளார்.

ஜகஜீவன்ராம் காங்கிரஸ் கட்சி பாரதியகிராந்திதலுக்கு கொடுத்துவந்த ஆதரவை விலக்கிக்கொண்டதை அடுத்து உத்தரப்பிரதேசத்தின் அரசியல் நெருக்கடி நிலைமை ஏற்பட்டது. இதனால் முதலமைச்சர் சுரண்சிங்கிற்கு இருந்த பெரும்பான்மை குறைந்தது இப்பொழுது நிஜலிங்கப்பா காங்கிரஸ், ஜனசங், சுதந்திரா ஆகியவை முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவித்திருந்தமையால் அவருக்குப் பெரும்பான்மை கிடைத்துள்ளது.

உத்தரப்பிரதேச சட்டசபையில் 425 உறுப்பினர்கள் உள்ளனர், இதில் முதலமைச்சர் சுரண்சிங்கிற்கு 236 உறுப்பினர் ஆதரவு உண்டு என அறியப்படுகிறது. நிஜலிங்கப்பா காங்கிரஸ் 95 ஜனசங் 43, பாரதீய கிராந்திதளம் 94, சுதந்திரா 4

நிஜலிங்கப்பா காங்கிரசுடன் மூன்றுமணி நேரம் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்பே காங்கிரஸ் தனது ஆதரவை சுரண்சிங்கிற்குத் தெரிவித்தது.

— —

## கட்சிக் கிளையினர் சிரமதானம்

உடுப்பிட்டி, ஞாயிறு வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமத்தில் போயா தினங்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அல்வாய்க் கிளையினர் திரு.வி.ஸ்ரீபால கணேசமூர்த்தின் தலைமையில் சிரமதான வேலைகள்செய்து வருகின்றனர்.

இவ்வாச்சிரமத்திலவயோதிபர் மடம், அனாதைப் பிள்ளைகள் விடுதி, கைத்தொழில் நிலையம் என்பனவற்றை ஒன்றரை லட்சம் ரூபா செலவில் நிறுவும் முயற்சியில் ஆச்சிரமத் தலைவர் சுவாமி பிரேமானந்தா நடவடிக்கைகள் எடுத்து வருகின்றார்.

...இன் ஒதுக்கல் கொள்கையுடைய தென் ஆபிரிக்க அரசாங்கத்திற்கு ஹீத் தலைமையிலான கொன்சர்வேட்டிவ் அரசாங்கம் ஆயுதங்கள் கொடுப்பதேன்ற முடிவை பிரிட்டிஷ் லிபரல் கட்சி மிகவும் வன்மையாகக் கண்டித்துள்ளது

லிபரல் கட்சியின் ஆண்டு மகாநாட்டில் இப்பிரேரணை மீது பல தலைவர்களும் அரசாங்கத்தின் முடிவு குறித்து கண்டனம் தெரிவித்தனர். இப்பிரேரணை பெரும்பான்மை ஆதரவு பெற்று நிறைவேறியதென அறியப்படுகிறது.

......

## நவராத்திரி விழா

தெல்லிப்பழை, ஞாயிறு வீமன்காமம் இளைஞர் சங்கத்தினால் இம்முறை வழமை போல் நவராத்திரிவிழா விமரிசையாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

— —

# கா. பொ. ஆட்சேபம்

யாழ்ப்பாணம், திங்கள் "தாங்கள் அனுப்பிய 'முத்திரை இரத்துச் செய்யும்' வைபவ அழைப்பிதழ் கிடைத்தது, இந்த அழைப்பிதழை அனுப்பிய கடித உறையில் திணைக்களத்தின் முகவரி ஆங்கிலத்திலும், சிங்களத்திலுமே உள்ளது அழைப்புடன் நீங்கள் அனுப்பிய வாகனச் செல்கைச் சீட்டு தனிச் சிங்களத்திலேயே உள்ளது" என தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம், தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"இந்த அரசாங்கம் தங்களை தமிழ் மக்கள்சார்பில் அமைச்சராக நியமித்திருப்பதாகக்கூறுகிறதுபிரதமரின்கமன் திரு, அனுராவும் இந்தச் செய்தியை யாழ்ப்பாணத்தில் எடுத்துரைத்துப் பெருமைப்பட்டார் எனப் பத்திரிகைச் செய்திகள்கூறுகின்றன.

தமிழ் மக்களின் சார்பில் அமைச்சரான தங்கள் அமைச்சிலுள்ளதிணைக்களங்களில் தமிழுக்கு உரியஇடத்தைக் கொடுக்க முடியாதென்றால் தாங்கள் அமைச்சர் பதவியிலிருப்பது தமிழ் மக்களுக்குப் பெருமை தராது. தமிழைஉரிய இடத்தில்வைக்க முடியாவிட்டால் தாங்கள் பதவியைத் துறப்பதே மேல் என திரு இரத்தினம் தன் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கப்பட்டுள்ளது.

...திகமாக ஒரு காரை வாங்குவதற்கு நிதியமைச்சு 12030 ரூபா செலவு செய்ய விருப்பதாகத் தெரியவருகிறது.

இன்று

## பண்டார நாயக்கா நினைவு கூட்டம்

யாழ்ப்பாணம், திங்கள் காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ், டபிள்யு. ஆர் டி. பண்டாரநாயக்காவின் 11-வது நினைவுதின விழா சிங்கள மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இன்று மாலை ஐந்துமணியளவில் மல்லாகம் கி. ச. தலைவர் திரு வ.பொன்னம்பலம் தலைமையில் சிறீ லங்கா சோஷலிச முன்னணி சார்பில் நடைபெறவிருக்கிறது.

தபால் தந்தி அமைச்சர் திரு. செ. குமாரசூரியர், வண. குடத்துவே நந்தாராம நாயக்கதேரோ, நியமன எம். பி. திரு. எம். சிசுப்பிரமணியம், மற்றுப் திருவாளர்கள் ஏ விசுவநாதன், ஏ ஏ வைத்திலிங்கம், எச் எஸ் வியனகே எம் மீரான்சாகிப், ஆர் ஆர். பூபாலசிங்கம், எஸ் நந்தசாமி, வழக்கறிஞர் பீட்டர் ஜெயசேகரா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

நாளை மாலை பிரித் ஓதும் வைபவமும், 30-ந் திகதி தானம் வழங்குதலும் இடம்பெறவிருக்கிறது.

(கு. வி. ம)

......

## ஆணையாளர் சுற்றறிக்கை

எழுதுமட்டுவாள், ஞாயிறு புதிய உணவுப் பங்கீட்டுத் திட்டப்படி விநியோகம் சம்பந்தமாக பொதுமக்கள் எவ்வித புகாரும் செய்ய இடங்கொடாதிருக்குமாறு எல்லா ப. நோ. கூ. சங்கங்களுக்கும், ஐக்கிய பண்டகசாலைகளுக்கும் கூட்டுறவு ஆணையாளர்சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறார்.

## திருமலையில் காந்தி ஜயந்தி

திருமலை, ஞாயிறு அடுத்த மாதம் 2-ம் திகதி மகாத்மா காந்திஜியின் 101-வது பிறந்ததினம் திருக்கோணமலையில்கொண்டாடப்படவிருக்கிறது. திருக்கோணமலை காந்தி சேவா சங்கத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கும் இவ்விழா திருமலை இந்துக்கல்லூரி சம்பந்தர் மண்டபத்தில் நகரசபைத் தலைவர் டாக்டர் சி. சிவானந்தம் தலைமையில் நடைபெறும்

## கலைக்களஞ்சியம்

மாஸ்கோ, செப் 27 30 தொகுதிகளை[illegible] புதிய சோவியத் கலைக்களஞ்சியத்தின் இரண்டாவது தொகுதி வெளியாகிவிட்டது.

இது கடந்த 20 [illegible]டு காலத்தில் விஞ்ஞான, [illegible]லை, கலாச்சார, தொழிற் துறை

...கள் இதுபற்றிப் பொலிஸில் புகார் செய்துள்ளனர்.

...களில் ஏற்பட்ட சகல மாற்றங்களையும் பிரதிபலித்துள்ளது. இக்கலைக்களஞ்சியத்தில் 100,000க்கு அதிகமான தலைப்புகள் உள்ளன. மொத்தம் 630,000 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன.

இதனால் தான் எங்கள் நாடு விண்வெளியை தன்னியக்க நிலையங்கள் மூலம் ஆராய்வது புறவெளி மர்மங்களை அறிவதற்கான உறுதியான வாய்ப்பினை அளிக்கிறது என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

இதற்கான தொழில்நுட்பச் சாத்தியப்பாடுகள் இப்போது உள்ளனஎன்பதை


புதிய

# பரத்தயன் ஈ-50

பாவித்து காய்கறி, புகையிலைப் பயிர்களைக் காப்பாற்றுங்கள்!



காய்கறிப் பயிர்களைப் பாதிக்கும் அழுக்கணவன், பனிப்பூச்சி, இலையரிப்புழு, வெண் ஈ, பேன், ஒட்டு உண்ணி, சிற்றுண்ணி, இலையுருட்டிப்புழு, தத்துவெட்டி முதலாம் எல்லாப் பீடைகளையும் கொல்ல வல்ல சர்வபூச்சி நாசினி பரத்தயன் ஈ 50.

புகையிலையையும் மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, கத்தரி, தக்காளி மற்றும் மரக்கறிப் பயிர்களையும் பாதிக்கும் சகல வித பூச்சி புழுக்களையும் சிக்கனமாக ஒழித்துக்கட்ட மிக்க வன்மையான நாசினி பரத்தயன் ஈ 50.

வைக்க, எடுக்க, வயலுக்குக் கொண்டு போக வர, வசதியான அலுமீனியம் போத்தல்களிற் கிடைக்கும். விலை மிகச் சகாயம்:-

100 சி.சி. - ரூ. 4/-
250 சி.சி. - ரூ. 9/-
1000 சி.சி. - ரூ. 31/-

சகாய விலையில் கூடிய பயனளிப்பது பரத்தயன்.

இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் - பரத்தயன் ஈ 50

முதல் பெருடாத்து உற்பத்தியாளர்கள் பேயர், ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரித்து விநியோகிப்போர் ஹேரக்கெம் லிமிட்டெட் 400. டீன்ஸ் வீதி, கொழும்பு 10.


# இன்றைய பலன்

புரட்டாதிமாதம்12-ம்திகதி (28-9-70)

மேஷம்- சிலருக்கு அதிர்ஷ்ட லாபங்களும் கிடைக்கலாம். சுற்றாடலில் நல்ல திருப்பம் ஏற்படும் உற்சாகமான தினம்

ரிஷபம்- ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும். சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம் கலைஞர்களுக்கு நல்ல தினம்.

மிதுனம்- உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும் வியாபாரத்துறையில் விருத்தியுண்டு தாய்வழிப் பொருள் வரவுக்கு இடம் உண்டு.

கடகம்- முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும், அதிக சிந்தனைக்கு இடமளியாதுவாய்வுப்பதார்த்தங்களைத் தவிர்க்கவும்

சிம்மம்- புத்திரர்களால் புகழும் கிடைக்கும். இறை நம்பிக்கையுடன் இல்லத்திலும் அமைதி தவழும் இக்க சிந்தை நன்று.

கன்னி- சொற்சிலம்பம் ஆடுவதன் மூலம் மற்றவர்களைச் சொக்க வைப்பீர்கள் சிலர் தேர்தல் விவகாரங்களிலும் ஈடுபடலாம்.

துலாம்- தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும். பெரியோரை பகைத்துக்கொள்ளாமல் பொறுமையைப் பேணி நடக்கவும்

விருட்சிகம்- கனிவா நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள், வாகனம் செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுவர் சுபதினம்.

தனுசு- இதயக்கமலம் இன்பத்தால் மலரும் இல்லறத்தில் பிணைப்புகள் இறுகும் கற்றதனால் பயனும் கிடைக்கும்.

மகரம்- திகைக்க வைக்கும் சம்பவம் இன்று நடைபெறலாம். கோஷ்டிச் சண்டையில் மாட்டிக்கொள்ளாதிருக்கவும்,

கும்பம்- குடும்ப விவகாரங்களில் பிணைப்புகள் இறுகும். காதல் உலகில் கனிவான சம்பவங்கள் இடம் பெறும் சுகபோக நாள்

மீனம்- சதிசெய்வதற்குச் சகாக்களே சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பர். பிரயாணத்தைத் தவிர்க்கவும் இறை நம்பிக்கை நன்று

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அரசியல், சமூக முன்னேற்றம் இவைகள் தேவையில்லையென்றே, அவசியமில்லை என்றே நான் சொல்லவில்லை. அவை நம்நாட்டிற்கு இரண்டாம் தரமான, முக்கியம் உடையவை. ஆனல் சமயமே இங்கு தலைசிறந்தது.

—விவேகானந்தர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna: Telephone: 889.

சௌம்ய வருஷம் சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 12-ந் திகதி (28-9-70)

## ஒரு கோரிக்கை

தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் இன்று யாழ்ப்பாணம் தபால் தந்தி நிலையத்தில் புதிய தொலைபேசி இணைப்புக் கருவியொன்றை திறந்து வைக்கவிருக்கின்றார் யாழ்ப்பாணம் வாடி வீட்டுக் கருகில் புதியஉபதபால்நிலையமொன்றையும் அவர் திறந்து வைக்கவிருக்கிறார். நல்ல நோக்கத்துடன் செய்யப்படும் இக் காரியங்களை மக்கள் முழு மனதுடன் வரவேற்பார்கள். தபால் தந்திச் சேவை சீரடைய வேண்டும் என்பதில் மக்களுக்கு விருப்பம் இருக்கிறது இதற்காக அவர்கள் உதவியும் ஒத்துழைப்பும் அளிக்கத் தயாராக இருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குத் தொலைபேசியில் தொடர்புகொள்வதென்றாலும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குத் தொடர்புகொள்வதென்றாலும் சுலபமான காரியமல்ல மூன்று மணிநேரத்திலிருந்து ஐந்து ஆறு மணி நேரம் தாமதம் ஏற்படும் அல்லது 'லைன் அவுட் ஒவ் ஓடர்' என்று தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து பதில் கிடைக்கும். பெரும்பாலும் இரண்டு மூன்று மணிநேரம் தாமதம் என்று முதலில் அறிவித்துவிட்டுப் பின்னர் கேட்கும் பொழுது 'லைன் அவுட் ஒப் ஓடர்' என்று பதில் கிடைப்பதும் இங்கு வழக்கமாகிவிட்டது. தொலை தூரத் தொலைபேசிக்குத்தான் இந்நிலைமை என்பதல்ல; ஐம்பது சதத்துடன் அரைமணி நேரத்தில் நேரில் சென்று அலுவல் பார்த்துத் திரும்பக் கூடிய சிற்றூர்களுக்கும் கூடத் தொலைபேசியில் தொடர்பு கொள்வது சில சமயங்களில் பெரும்பாடாகிவிடுகிறது.

தொலைபேசி நிலை இப்படியென்றால் தந்திச் சேவை இதைவிட மோசமாக இருக்களுக்கும்கூட இந்தக் கதியேற்படுகிறதென்றால் சாதாரணத் தந்திகளின் நிலை என்னவென்பதை விளக்கத் தேவையில்லை.

தந்திக்கம்பிகள் திருட்டுப் போவது இவற்றுக்கு ஒரு காரணம் என்று சொல்லப்படுகிறது. நிலத்தின்கீழ் தந்திக் கம்பிகள் புதைக்கப்பட்டுத் தொடர்பேற்படுத்துவதன் மூலம் தந்திக் கம்பிகள் திருட்டுப்போவதைத் தடுக்க முடியும் இதே சமயம் நாட்டைக்காக்கும் நிதிக்காக ஒரு நாள் சம்பளத்தை வழங்கியும் நிதி திரட்டியும் வழங்கும் தேச விசுவாச மிக்க ஊழியர்களும் மக்களும் இது போன்ற தேச விரோதமான திருட்டுக்களில் ஈடுபடுவோரைக் கண்டுபிடித்துக் கொடுப்பதன் மூலமும் திருட்டுக்களைத் தடுப்பதற்கும் நாட்டின் வருமானத்தைப் பெருக்குவதற்கும், அரசாங்கத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் தபால் தந்திச்சேவை சீராக இயங்குவதற்கும் வழி வகுக்க முடியும்,

கண்டத்துக்குக் கண்டம் ஒரு சில மணி நேரத்துள் தகவல்களையும் செய்திகளையும் அனுப்பக்கூடிய அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்துள்ள இந்நாளில் யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்குமிடையில் மட்டுமல்ல யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பல பகுதிகளுடனும் உடனுக்குடன் தொடர்புகொள்வதற்கு வசதியிருந்தும் வாய்ப்பில்லாமலிருப்பதேன் என்பது பற்றி ஆராயவேண்டியதும் ஆராய்ந்து இக்குறைகளை நீக்கத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதும் அவசரமும் அவசியமுமாகும்,

இதற்கு முன்னர் தபால் தந்தி இலாகாவுக்குப் பொறுப்பான அமைச்சர்களும் அதிகாரிகளும் வாக்குறுதி அளித்துவிட்டு வாளா

# 'இலங்கைசுதந்திரம்பெறதமிழர்களே முதலில் முன்னின்று உழைத்தார்கள்'

## பண்டாரநாயக்கா நினைவு தினவிழாவில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகர்

யாழ்ப்பாணம், திங்கள் "இந்நாட்டிற்கு சுதந்திரம் வேண்டும் என்று முதன் முதலில் தமிழ்மக்கள்தான் முன்னின்று உழைத்தார்கள் டொனமூர் அரசியல் திட்டத்தை சிங்கள மக்கள் ஏற்றபோது இந்நாட்டிற்கு முழுச்சுதந்திரம் வேண்டும் என தமிழ்மக்கள் அத்திட்டத்தைப் பகிஷ்கரித்தார்கள். 48-ம் ஆண்டு வரை தமிழ் மக்கள் சுதந்திரத்திற்காக போராடினர்களே ஒழிய மத, மொழி, பிரச்னைகள் பற்றி அக்கறைப்படவில்லை."

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் நடந்த அமரர் பண்டாரநாயக்கா தினக் கூட்டத்தில், சுதந்திரக்கட்சியை சேர்ந்த திரு. ஜெயபத்திரான பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

திரு. எம். துரைராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. ஜெயபத்திரான மேலும் கூறியதாவது:

இந்நாட்டிற்குசுதந்தரம் கிடைத்த பின்னர் தமிழ்மக்கள், தமிழ்க் கட்சிகளின் வகுப்புவாதக் கூச்சலைப் பின்பற்றியதனல் அவர்கள் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. சுதந்திரத்திற்கு முன்னர் தமிழ் மக்கள் சிங்களமக்களுடன் ஒத்துழைத்தார்கள் இன, மத பிரச்னைகள் அப்பொழுது ஏற்படவில்லை சுதந்திரம் கிடைத்த பின்னர் தான் இப்பிரச்னைகள்தோன்றின.

இரண்டாவது மகாயுத்தத்தின்போது தரைமட்டமாக்கப்பட்ட ஜப்பான் இன்று அபிவிருத்தியடைந்த நாடாக விளங்குகிறது நிர்மூலமாக்கப்பட்ட ஜெர்மனி இன்று முன்னணியில் நிற்கின்றது. ஆனல் எமதுநாடு சுதந்திரம் பெற்று 22 வருடங்களாகியும் முன்னேறவில்லை, கடந்த 22 வருட காலமாக இந்நாட்டில் மொழி, மத பிரச்னைகளில் நேரத்தைச் செலவிட்டதால் நாடு அபிவிருத்தி அடையவில்லை: ஆனல் ஜப்பான், ஜேர்மனி நாடுகளில் இப்

கிழக்கு என்ற பாகுபாடு கிடையாது,

கம்யூனிஸ்கட்சியை சேர்ந்த திரு. அ வைத்திலிங்கம் கூறியதாவது: தமிழ்பிள்ளைகள் தமிழரின் நன்மைக்காகவே சிங்களம் படிக்கவேண்டும் சகோதர மொழியான சிங்களத்தைப் படிப்பதில் தவறில்லை உத்தியோகத்திற்காக சிங்களம் படிக்கும்படி நான் கூறவில்லை. சிங்கள மக்கள் வடக்கிற்கு வரும்போதும், நாங்கள் தெற்கிற்குப் போகும் போதும், அவர்களுடன் கலந்துரையாட சிங்கள மொழிஅவசியம் தேவை. அரசாங்கத்துடன்தொடர்பு கொள்ளமட்டுமன்றி வர்த்தகரீதியில் தொடர்புகொள்ளவும் சிங்களம்வேண்டும். சிங்களமக்களில் பலர்இன்று தமிழ் படிக்க ஆரம்பித்துள்ளார்கள். ஆதலால் நாம்சிங்களம் படிப்பதில் தவறில்லை.

இந்திய சினிமா வினலும், சஞ்சிகைகளாலுமே, இந்நாட்டு, தமிழ், கலை, கலாச்சாரம், வளராமல் தடைப்பட்டது. இந்நாட்டில், தமிழ் கலைஞர்களும் எழுத்தாளர்களும் வளருவதற்கு, இந்திய சஞ்சிகைகளும், சினிமாவும் முட்டுக்கட்டையாக இருக்கிறது.

இந்நாட்டில்வாழும் அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களுக்காக பாடுபட்டவர் அமரர் பண்டாரநாயக்கா, அவர்களுக்காக சமூக ஏற்றதாழ்வு ஒழிப்புச்சட்டத்தை கொண்டுவந்தார். யாழ்ப்பாண தமிழர்களுக்கு இன்று சிக்கலான நிலைமை ஏற்பட்டுள்ளது. நம்முன்னேர் மலேயா, சிங்கப்பூர், பர்மா போன்ற நாடுகளுக்குச் சென்று உழைத்தார்கள் தென்னிலங்கையில் உயர்ந்த பதவிகள் வகித்தார்கள். ஆனல் இன்று நிலைமைமாறிவிட்டது வருங்காலத்தில் தமிழர்கள் வெளிநாடுகளுக்கு சென்று உழைக்கமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது:

தமிழர்கள் ஏகாதிபத்தியவாதிகளையும், ஆங்கிலத்தையும், எதிர்க்காததற்கு காரணமிருந்தது: தென்னிலங்கையில் உள்ள தோட்டங்களில் ஆங்கிலேயர்களால் இந்திய தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். இதனை சிங்களமக்கள் எதிர்த்துவந்தார்கள். இதன் காரணமாக ஏகாதிபத்தியவாதிகளை சிங்களமக்கள் எதிர்த்தார்கள் ஆனல் வடக்கில் இந்தநிலைமை ஏற்படவில்லை. அதனல் ஏகாதிபத்தியவாதிகளை எதிர்க்கவேண்டிய நிலைமை தமிழருக்கு ஏற்படவில்லை. மிஷனரிமூலம் தமிழ் மக்களுக்கு பாடசாலைகள் நிறுவப்பட்டதாலும், இதன்மூலம் தமிழர் படித்து உத்தியோகம் பெற முடிந்ததாலும்ஏகாதிபத்தியவாதிகளை அவர்கள் எதிர்க்கவில்லை, கல்வியை மட்டுமே தமிழர் நம்பியிருந்ததால், ஏகாதிபத்தியவாதிகளையோ ஆங்கிலத்தையோ எதிர்க்க அவர்கள் முன்வரவில்லை. ஆனல் இன்று நிலைமைமாறிவிட்டது. வேலையில்லாத் திண்டாட்டம் பெரும்பிரச்னையாக இருக்கிறது. இதனை தீர்க்கவேண்டுமானல் சிங்களமக்களுடன் ஒத்துழைத்தே தீர்க்கவேண்டும்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. நிமால் அமரசேகரா பேசும்போது கூறியதாவது இன்று இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு மக்கள் மனதிலும் அமரர் பண்டாரநாயக்கா இடம் பெற்றுள்ளார் மக்கள் நன்மைக்காகப் பாடுபட்ட லட்சிய புருஷர்களாகிய மகாத்மா காந்தி. கெனடி போன்றவர்களுக்கு கிடைத்த முடிவுதான் அமரர் பண்டாரநாயக்காவுக்கும் கிடைத்துள்ளது. இவரின் ஞாபகம், வருடாவருடம் வளர்ந்து கொண்டுபோகின்றது அவர் ஒரு சமுதாயத்திற்காகவோ மொழிக்காகவோ, பாடுபட்டவரல்ல இந்நாட்டு ஏழைமக்களின் நல்வாழ்விற்காகப் பாடுபட்டார் என்றார்.

# ஆன்மஉலகின் அசுத்தம் போக்க வந்த அருணந்தி

கருமேகங்களுக்கிடையே ஒளிவிடும் மின்னற்கீறு போன்று அநாகாரமானஆத்மீக உலகில் மெய் ஞானக்கீறு மின்னி ஒளிவிட்டுமறைகிறது. ஊருணி என்பது ஊராரால்உண்ணப்படுவது. இது அசுத்தமானல் சுத்தஞ் செய்யப்படுவதுபோல ஆன்ம உலகில் உள்ள அசுத் தங்களை போக்க இறைவன் அடியவர்கள் காலத்துக்குக் காலம் தோன்றுகிறார்கள்.

தோதிக்கொண்டிருந்தார். இது காரணமாக, சென்று-நின்றுகொண்டிருந்த அருணந்தி சிவா சாரியாரை அவர் அவதானிக்கவில்லை. அருணந்தி சிவா சாரியார் சீற்றங்கொண்டார். 'ஆணவ பலமாவது என்னை' என அறிவீரோ என்றுகேட்டார். அவர் நின்ற நிலையைச் சுட்டிக்காட்டி 'உந்தநிலைதான்

லிருந்து மூளைத்ததுதான் சிவஞானசித்தியார்.

'பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே, ஒருவிருத்தப் பாதி போதும்' என்ற சிவபோத சாகரவரிகள் சித்தியாரின் மதிப்மைப் புலப்படுத்தும். இருபா இருபஃது என்பது இவர் இயற்றிய மறுநூல் இது பத்து அகவற்பாவாலும் பத்து விருத்தப் பாவாலும்

# ஜெயாறன் எழுதுவது:

"மற்றெல்லாச் சமயத்தவர்களுக்கும் கடவுள் என்ற ஒரு பிடிமானம் உண்டு. சோதனை ஏற்பட்ட காலத்தில் அவர்கள் தெய்வம்காக்குமென்று நம்பி ஒருவித ஆறுதல் அடைய முடியும். ஆனல் பௌத்தர்களுக்கு அவ்வித பிடிமானம் எதுவுமில்லையே ........" என்று கருத்துப்பட, பல் வருடங்களுக்கு முன்பாக கொழும்பிலே பிரதமர் பண்டாரநாயக்கா சில நண்பர்களிடையே பேசும்போது கூறியதைக் கேட்டேன்.

அதனல்தான் இந்நாட்டிலுள்ள பௌத்தர்கள் கதிர்காமத்துக்கும், முன்னேஸ்வரம் முதலிய இடங்களுக்கும் சென்று பக்தியுடன்வழிபட்டு ஆறுதல் அடைகிறார்கள். ஆகவே பௌத்த பொதுமக்களைப் பொறுத்த வரை அவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு பிடிமானம் இல்லை என்ற குறை இருக்கத்தேவையில்லை யல்லவா? இலங்கையில் பொதுமக்கள் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பினும், அவர்கள் மதவேற்றுமையின்றி எல்லாக் கோயில்களுக்கும், வழிபடும் ஸ்தலங்களுக்கும் செல்லுவது குறிப்பிடத்தக்கது.

0 0 0

வாழ்க்கையிலே சில நெருக்கடிகள் ஏற்பட்டபோது, தமக்கு நல்ல வழிகாட்டியது பகவத்கீதைதான் என்று பௌத்தரான பண்டார நாயக்கா அவர்கள் பலரிடமும் தெரிவித்திருக்கிறார். ஐக்கியதேசியக் கட்சியிலிருந்து பிரிந்தபோதும், அவரது கட்சியிலிருந்த சிலரே அவருக்கு மாறுகக் கிளர்ச்சி செய்தபோதும். அவரது அரசியல் வாழ்க்கையில் பெருநெருக்கடி ஏற்பட்டது 'சுகதுக்கம், இலாபநஷ்டம்; வெற்றி தோல்வி இவற்றைக் கருதாமல் போருக்குத் தயாராகுக! பற்றுதல் இல்லாமல் உன்கடமையைச் செய்" என்று கீதையிலே கண்ணன் காட்டிய வழிதான், அவருக்குத் துணிச்சல் கொடுத்து உதவியதாம்.

கீதை இந்துக்களுக்கான நூல் மட்டுமல்ல. அது மக்கள் குலமனைத்துக்கும் உதவக்கூடிய உலக நூல். மகாத்மாகாந்தி சென்னைக்கு ஒரு சமயம் வந்திருக்கையில் மாணவர் கூட்டத்தில் பேசினர். "கீதையை மூலத்திலே படிப்பதற்காகவாவது சமஸ்கிருதத்தைப் படியுங்கள். அதில் பல அரிய பொக்கிஷங்கள் இருப்பதைக்காணலாம். என் வாழ்க்கைக்கு வழிகாட்டி வருவது அந்த நூலே" என்று குறிப்பிட்டார். ஆனல் இன்று சென்னையிலே எவ்வளவு மாணவர் கீதை படிக்கிறார்கள்? பள்ளியில் சமஸ்கிருதம் படிக்க இருந்த வாய்ப்புகளும் இப்போது இல்லையாம். மகாத்மா இதைப் பார்த்தால் என்ன சொல்லுவாரோ?

வருகிற அக்டோபர் 2-ந் திகதி சென்னையிலே காந்தி ஜயந்தி விழா, முதலமைச்சர் கருணாநிதியின் தலைமையில் நடக்க இருப்பதாக ஒரு செய்தியைப் பார்த்தேன். சமஸ்கிருதத்தைப் பற்றியும் கீதையைக் குறித்தும் மகாத்மா கூறியதை அவர் நினைவுகூர்ந்து, அவற்றைச் சென்னையிலே எல்லா மாணவர்களும் கற்க மீண்டும் வாய்ப்பளிக்கச் செய்வாரா?

பகவத்கீதைஉலகப்பொது நூல் ஆகிறபடியால், இந்தியாவிலும். ஈழத்திலும்கூட பள்ளிக்கூடங்களில்மகாத்மா காந்தியின் பெயரால் ஏன் படிப்பிக்கக்கூடாது?

0 0 0

நனவிலுங் கனவிலு நாளுந் தன்னொளி, நினைவிலு மெனக்குவந் தெய்து நின்மலன், கனைகடல் வையகந் தொழு கருங்குடி, அனலெரியாடு மெம் மடிகள் காண்மினே. சம்பந்தர்.

# அமைச்சர் குமாரசூரியர் கலந்துகொள்ளும் யாழ். நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம் வாடி வீட்டிற்கு அருகில் புதிய உப தபால் நிலையமொன்றை இன்று காலை 9 மணிக்கு

அமரர் பண்டாரநாயக்கா தின விழாவில் தபால் அமைச்சர் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார்.

அன்று காலை 11 மணிக்கு சாவகச்சேரி சுதந்திர கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசியில் தொடர்பு கொள்வது சில சமயங்களில் பெரும்பாடாகிவிடுகிறது.

தொலைபேசி நிலை இப்படியென்றால் தந்திச் சேவை இதைவிட மோசமாக இருக்கிறது. முதல் நாள் கொடுக்கும் தந்தி அடுத்த நாள் தபால் கிடைக்கும் நேரத்தையும் கடந்து கிடைக்கிறது பத்திரிகைச் செய்தித் தந்தி அவசியமுமாகும்.

இதற்கு முன்னர் தபால் தந்தி இலாகாவுக்குப் பொறுப்பான அமைச்சர்களும் அதிகாரிகளும் வாக்குறுதி அளித்துவிட்டு வாளாவிருந்தது போல் அறிவும் ஆற்றலும் நிரம்பிய அமைச்சர் திரு. குமாரசூரியரும் இருக்கக்கூடாதென்பதுவே மக்களின் கவலை.

## "தொழிற்சங்க வாதிகள்

# கைப்பொம்மைகளாக இருக்கக் கூடாது"

வவுனியா, ஞாயிறு

'தொழிற்சங்கத்தில் பிரதிநிதியாக கடமையாற்றும் ஊழியர்கள் தனது சுயநலத்தைக் கருதாமல் தொழிலாளர்களுடைய பிரச்னைகளில் கண்ணும் கருத்துமாக இருப்பதோடு முதலாளி வர்க்கத்துக்கு கைப்பொம்மைகளாக இருக்கக்கூடாது. நீதி நேர்மையுடன் எவ்வித அச்சமுமின்றி நாம் பணிபுரிய வேண்டும்'

இவ்வாறு வவுனியா இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மாவட்டபிரதிநிதி திரு எஸ். ஆர். எம். பி. வேலுச்சாமி கடந்த புதன்கிழமை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மாவட்டக்கிளை காரியாலயத் திறப்பு விழாவில்பேசியபோது குறிப்பிட்டார்.

இத்திறப்புவிழாவுக்கு மத்திய செயலக அரசியல் காரியதரிசி திரு. வி. ஆர். சேவுகப் பெருமாள் தலைமை வகித்தார். இவ்விழாவில் கவிஞர் எஸ். ஆர். தங்கவேலுவும் உரையாற்றினர். செயல்கமிட்டி உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு.எஸ்.துரைச்சாமிரெட்டியா, உபதலைவர்கள்: திரு. ஏ. குருசாமி திரு. எஸ் சுப்பையா, காரியதரிகள்: திரு. எஸ். கந்தசாமி, திரு. பி செல்லையா, தனாதிகாரி திரு எஸ். தர்மலிங்கம், கமிட்டி அங்கத்தவர்கள்: திருவாளர்கள் கே. நல்லு, கே. நாராயணசாமி, ஜனாப் எஸ். பி. செயது, கே. பூஞ்சோலை ரெத்தினம், பி. மருதபாண்டியன், ஆர். குழந்தைவேல் ஆ. எமகேஷர், கே. சின்னையா, ஏ. லட்சுமணபிள்ளை.

## தென்காசி நகரசபை

# வரியை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டம்

## பொலிசார் சுட்டதில் ஒருவர் பலி

சென்னை, செப். 27

தென்காசி நகரசபையின் முன் ஆர்ப்பாட்டம் செய்த ஒரு கூட்டத்தின் மீது பொலிசார் சுட்டதில் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர்.

தென்காசி நகரசபை அண்மையில் விதித்தவரியை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். நகரம் முழுவதும் ஹர்த்தால் அனுசரிக்கப்பட்டது மக்கள் கூட்டம் நகரசபையின் வரிவிதிப்பை எதிர்த்து ஊர்வலமாக நகரசபைக்குச் சென்றது அங்கு நகரசபை முதல்வரைச் சந்தித்துவிட்டு வெளியேறிய பின்பு ஊர்வலத்தினர் கற்களாலும் போத்தல்களாலும் நகரசபை மீது தாக்குதல் நடத்தினர் இவ் வன்முறையைக் கட்டுப்படுத்த முடியாமற் போகவே கூட்டத்தின் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் இதில் ஒரு பொலிஸ் அதிகாரியும் 4பொலிஸாரும் காயம் அடைந்தனர் என அறிவிக்கப்பட்டது.

இத்துப்பாக்கிப் பிரயோகம் பற்றி நீதிவிசாரணை நடத்தப்படுமென தமிழ் நாடு முதலமைச்சர், கருணாநிதி இன்று சென்னையில் தெரிவித்தார். ஊர்வலத்தில் சென்றவர்கள் அமைதியாக நடந்து கொண்டார்கள் எனவும் பின்சில விஷமிகள் கூட்டத்தில் ஊடுருவல் செய்த பின்பே வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றதாகத் தெரியவருகிறதெனமுதலமைச்சர் மேலும் தெரிவித்தார் இது பற்றி திருநெல்வேலி மாவட்ட அதிகாரிகளுடன் முதலமைச்சர் தொடர்பு கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடந்தஇடத்தை நேரில் காண்பதற்காக பொலிஸ் உயர்தர அதிகாரி திரு. கிருஷ்ணசாமி தென்காசிக்கு உடனடியாகச் சென்றுள்ளார்.

காலமாக இந்நாட்டில் மொழி, மத பிரச்னைகளில் நேரத்தைச் செலவிட்டதால் நாடு அபிவிருத்தி அடையவில்லை: ஆனால் ஜப்பான், ஜேர்மனி நாடுகளில் இப் பிரச்னைகள் தோன்றாததால் நாடுகள் அபிவிருத்தியடைந்தன.

கடந்த 22 வருடகாலமாக வகுப்புவாதக் கூச்சலைப் பின்பற்றி வந்த தமிழ் மக்கள் மத்தியில் இன்று ஒரு கசப்பு உணர்ச்சி தோன்றியுள்ளது. அமரர் பண்டாரநாயக்கா இன மத வேறுபாடின்றி எல்லோரையும் சமமாகவே பாவித்துவந்தார். அதனால் தான் நாடு முழுவதும் அவரது சிரார்த்ததினம் கொண்டாடப்படுகின்றது.

சமசமாஜகட்சியைச் சேர்ந்த திரு.சரத்நாவன பேசும்போது கூறியதாவது; 'காலத்திற்குக்காலம் சிறந்த தலைவர்கள் தோன்றுவது வழக்கம். இந்தமுறையில் அமரர் பண்டாரநாயக்கா இந்நாட்டில் தோன்றினார். மக்களுக்கு உண்மையான சுதந்திரத்தை பெற்றுக் கொடுக்கவே தோன்றினார் இந்நாட்டில் சேர் பொன். இராமநாதன் பெரிய தலைவர்களில் ஒருவராக விளங்கினார். அப்படியான பெரியாரின் வரிசையில்தான் அமரர்பண்டாரநாயக்காதோன்றினார். எமது கட்சி அரசாங்கத்தை அமைக்காத போது, எமது கொள்கைகளை அமைக்க முன்வந்தது. பண்டாரநாயக்காவிற்கு நாம் ஆதரவளித்தோம் அமரர் பண்டாரநாயக்கா சமுதாய மாற்றத்தை உணரக் கூடியதாக விளங்கினர், மூன்று கட்சிகளின் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தான் அரசாங்கம் அமைக்கப்பட்டது, அமரர் பண்டாரநாயக்காவின் கொள்கைகளை அரசாங்கம் அமுல் நடத்தும். வருங்காலத்தில் பல திட்டங்களை அமுலநடத்தவிருக்கிறோம், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தை தேசியமயமாக்குவதற்குவழி வகுத்துள்ளோம், மக்கள் அரசாங்கத்திற்கு வடக்கு

...வாரால் உணரப்படுவது. இது அசுத்தமானால் சுத்தஞ் செய்யப்படுவது போல ஆன்ம உலகில் உள்ள அசுத்தங்களைப்போக்க இறைவன் அடியவர்கள் காலத்துக்குக் காலம் தோன்றுகிறார்கள். 'பெற்றோல்' தோய்ந்த துணியில் நெருப்பு மின்னல் வேகத்தில் பற்றுவதுபோல மெய்யடியார்கள் சிந்தையில் இறையருள் மனோவேகத்தில் பற்றும்; நின்று நிலைக்கும் கப்பலுக்குக் கலங்கரை விளக்குப்போல இவரின் வழியைப் பின்பற்றி மக்கள் உய்திபெறுவர்.

இந்தியாவில் உள்ள நடுநாட்டில் அமைந்த திருத்துறையூரில் அருணந்தி சிவாசாரியார் அவதரித்தார். இவரது இயற்பெயர் சதாசிவாசாரியார் என்பது. இவர் ஆதி சைவப் பிராமண குலத்தைச் சேர்ந்தவர். சிவநெறிச் சிந்தையர். சிவவழி வாழ்ந்தவர். ஆகம நெறிகளைக் கரைகண்டவர், இது காரணமாகச் சகலாகம பண்டிதர் என்னும் காரணப் பெயர் பெற்றவர். சைவநெறியை ஆன்ம உலகில் பரவச் செய்தார். பல இடங்களிலும் சைவ வகுப்புகளை ஏற்படுத்திச் சமயப் பிரச்சாரஞ்செய்தார். சைவநெறிகளை விளக்கஞ்செய்வதற்காக சிவாகமங்களை வண்டியில் ஏற்றி செல்வார் என உரைப்பர். அச்சுதகளப்பாளர், மறைஞான சம்பந்தர் போன்றோர் இவரின் மாணாக்கர்களாவர்.

இவரது காலம் கி. பி. 1275-ம் ஆண்டு எனக் கூறப்படுகிறது. பதின்மூன்றாம் நூற்றாண்டு என்பது இதன் மறுபதமாகும். சோழப் பேரரசு மகுடம் பூண்டு நிலைபெற்றதையண்டியகாலம். சைவமும் தமிழும் தமிழ்நாட்டில் இருகண்களாகப் போற்றப்பட்டகாலமது என்று கூறலாம். 'துணி வெளுக்க மண் உண்டு, மனம் வெளுக்க மண் இல்லையே' என்று பாடினார் பாரதி இது பின்னையது முன்னரே இதற்கு விடை காட்டியவர்சந்தானகுரவர். இடையிட்ட காலத்தில் அன்னியர் ஆளுகையின் கீழ் தொய்வு ஏற்பட்டதையே இது புலப்படுத்துகிறது.

ஞானக் குழந்தையான மெய்கண்டாரிடம் இவர் ஞானம்பெற்றார். மெய்கண்டாருக்கு மாணவர் நாற்பத்தொன்பதுபேர். இவர்களுள் அருணந்தி சிவாசாரியார் ஒருவர். ஆசிரியர் மாணவர்களுக்கு ஆணவமலத்தின் தன்மையை விரித்

...சிற்றங்கொண்டார். 'ஆணவ பலமாவது என்னை' என அறிவீரோ என்றுகேட்டார். அவர் நின்ற நிலையைச் சுட்டிக்காட்டி 'உந்தநிலைதான்

**கூ: கனகசபாபதி**

அதன்தன்மையை உணர்த்தப்போதுமானது' என்று அவரிலேயே உதாரணங்காட்டி விளக்கங்கொடுத்தார் மெய்கண்டார். சூரிய ஒளிவர இருள் அகலும். இதுபோல மெய்கண்ட சூரியனால் இவரின் ஆணவ இருள் திரை கிழிந்தது. அவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' 'தாடலைபோற் கூடியவை' என்ற அடிகள் இங்கு நினைவு கூரத்தக்கன சிவஞான போதப்பொருளை மெய்கண்டாரிடம் ஐயந்திரிபு அறியாமை அகலக் கற்றறிந்தார். இவ்வித்திலி சாகரவரிகள் சித்தியாரின் மதிப்மைப் புலப்படுத்தும். இருபா இருபஃது என்பது இவர் இயற்றிய மறுநூல் இது பத்துஅகவற்பாவாலும் பத்து விருத்தப் பாவாலும் விரவி இயற்றப்பட்ட காரணத்தால் இப்பெயர் பெற்றது இந்நூல் மாணவர் ஆசிரியர் விடைகூறும் பாணியில் அமைந்துள்ளது. இவ்விருநூலின் பாயிரத்துள்ளும் தன் குருவாம் மெய்கண்டாரை வியந்துரைத்துள்ளார்.

அருணந்தி சிவாசாரியார் பரமசிவானந்தம் என்றும் அந்தணருக்கு அருள்செய்து அவருக்கு மறைஞான சம்பந்தர் தீட்சாநாமத்தை வழங்கினார்.

இவர் தமது ஊரில் ஒரு புரட்டாதித்திங்கள் பூரநட்சத்திரத்தில் முத்தியடைந்தார். அத்தினம் இன்றாகும். அவர்நாமத்தை மனமலர் மிசை இருத்தி வணங்கி வாழ்த்துவாம்.

# 'நாடற்ற நிலைமையை நிவர்த்தி செய்ய வேண்டும்'

## இலங்கை அரசிடம் ஆசிய பிராந்திய நிர்வாக சபை கோரிக்கை

ஜாகர்த்தா, செப். 27

1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ம்திகதி முதல் 12-ம் திகதிவரை இந்தோனேஷியதலைநகரான ஜாகர்த்தாவில் நடைபெற்ற சர்வதேச சுதந்திர தொழிற்சங்க சம்மேளன ஆசியப் பிராந்திய நிர்வாக சபையின் 32-வது கூட்டத்தின்போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

இலங்கை அரசாங்கம் சுதந்திரம் அடைந்த பின் குறுகிய மனப்பான்மையுடன் உருவாக்கிய குடியுரிமைச்சட்டத்தின் மூலம் இலங்கையிலேயேபிறந்துசந்ததி, சந்ததியாக இந்நாட்டிலேயே வாழ்ந்துள்ள பத்து லட்சம் மலைநாட்டு இந்திய வம்சாவழியினரை மொழி, இன பாகுபாட்டால் சிறுபான்மையினரென ஒதுக்கி கடந்த 20 வருடங்களாக நாடற்றவர்களாக ஆக்கியிருப்பது மிகவேதனைக்குரியதாகும்.

இவ்வாறு நாடற்றவர்களாக ஆக்கப்பட்ட பத்து லட்சம் பேருக்கும் மனித அடிப்படை உரிமைகளான கல்வி மொழிப்பயிற்சி வேலை வசதி மற்றைய வசதிகள் உரிமைகள் யாவும் மறுக்கப்பட்ட காரணத்தால் அவர்களுடைய உடல் வளர்ச்சி, மனோ வளர்ச்சி மற்றும் சமூக பொருளாதார ஆத்மீக வளர்ச்சியாகவும் பாரதூரமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

சோஷலிச ஜனநாயகத்துவத்தை அடையக் கூடிய ஒரு தனி இலக்குள்ள சுதந்திர நாடாக இலங்கையைப் பிரகடனப்படுத்தும் பொருட்டு ஒரு புது அரசியல் சாசனத்தைத் தயாரிக்க இலங்கை அரசாங்கம் முற்பட்டிருக்கும் இத்தருணத்தில்

இந்திய வம்சாவழியினரின் நாடற்ற நிலைமையை உடனடியாக நிவர்த்தி செய்து அவர்களும் தாம் பிறந்த இந்நாட்டின் வளர்ச்சியில் பங்கு கொள்ளவும், மனிதர்களாக மதிக்கப்படவும் ஆவன செய்யுமாறு, இலங்கை அரசியல்நிர்ணயசபையையும், இலங்கை அரசாங்கத்தையும் சர்வதேச சுதந்திர தொழிற்சங்க சம்மேளன ஆசியப் பிராந்தியநிர்வாகசபை இத்தால்கோருகின்றது.


**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**


## கலந்துகொள்ளும் யாழ். நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் வாடி வீட்டிற்கு அருகில் புதிய உபதபால் நிலையமொன்றை இன்று காலை 9 மணிக்கு தபால் அமைச்சர் திரு.செ. குமாரசூரியர் திறந்துவைப்பார். இதைத்தொடர்ந்து காலை 11 மணிக்கு யாழ்ப்பாணம் தபால்நிலையத்தில் 800 இணைப்புக்களைக் கொண்டசுயமாக இயங்கும்புதிய பரிவர்த்தன நிலையத்தை தபால் மந்திரி திறந்து வைப்பார்.

வாடி வீட்டிற்கு அருகில் திறக்கப்படும் தபால் நிலையம், 'கோர்ட்டு தபால் நிலையம் என அழைக்கபடும் இத் தபால் நிலைய திறப்பு விழாவிற்கு யாழ். ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைவர் திரு ஏ ரி. துரையப்பா தலைமைவகிப்பார். திருமதி நமசிவாயம் இத் தபால் நிலையஅதிபராக கடமையாற்றுவார்.

உத்தியோக பூர்வமாக வட பகுதிக்கு நான்கு தினங்கள் விஜயம் செய்யும் தபால் மந்திரி திரு குமாரசூரியருக்கு பல இடங்களில் வரவேற்பு அளிக்கப்படவிருக்கிறது.

இன்று பிற்பகல் யாழ் சுதந்திர கட்சி கிளை உறுப்பினர்கள் மந்திரியை சந்தித்து கலந்துரையாடுவார்கள். இன்றிரவு 6மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் அமரர் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த விழாவில் மந்திரி உரை நிகழ்த்துவார்.

நாளை 29ம்தேதி காலை வட பகுதியில் உள்ள சுதந்திர கட்சி கிளை உறுப்பினர்களைச் சந்திப்பா. இரவு சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் தபால் மந்திரிக்கு வரவேற்பு அளிக்கப்படும்.

நாளை பிற்பகல் 3 மணிக்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் முன்னாள் தலைவர் திரு ப. மு. சங்கரப்பிள்ளையின் உருவப்படத்தை மந்திரி திரைநீக்கம் செய்து வைப்பார்.

பிற்பகல் 4 மணிக்கு மூளாயிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி விக்டோறியா கல்லூரி மைதானத்தை வந்தடையும், அங்கு நடைபெறும் பகிரங்க கூட்டத்தில் வட்டுக்கொட்டை எம். பி திரு. ஏ. தியாகராசா, நியாயவாதி திரு ஏ. அமிதலிங்கம், திரு வி சச்சிதானந்தன், கல்லூரி அதிபர் திரு எஸ் சிவசுப்பிரமணியம் உட்பட பலர் உரை நிகழ்த்துவார்கள்.

30ம் தேதி காலை 10 மணிக்கு கைதடி சுதந்திர கட்சி கிளை சார்பில் நடைபெறும். அமரர் பண்டாரநாயக்கா தின விழாவில் தபால் அமைச்சர் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார்.

அன்று காலை 11 மணிக்கு சாவகச்சேரி சுதந்திர கட்சி கிளையினால் மந்திரிக்கு வரவேற்பளிக்கப்படும். இதைத் தொடர்ந்து கொடிகாமம் மிருசுவில் சுதந்திர கட்சி கிளைகளினாலும் வரவேற்பளிக்கப்படும்.

மிருசுவில் பெண்கள் குடியேற்ற திட்டத்திற்கும் மந்திரி விஜயம் செய்வார். 30-ம்தேதி மாலை கிளிநொச்சி றெட்றிகோமைதானத்தில் நடைபெறும், வானொலி விவசாய விழாவில் தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் பிரதம விருந்தினராககலந்து கொள்வார். கிளிநொச்சித் தொகுதி சுதந்திரக்கட்சிகிளைகள் அளிக்கும் வரவேற்பிலும் மந்திரி கலந்து கொள்வார்


"ஈழநாடு" வாரமலர்

29 - 9 - 70

சிறுகதை

'அவனுள் அவன்'

தெணியான் எழுதியது

எங்கள் கிராமம்-1

'நவாலி பற்றி'

வி. என். பி. எழுதுகிறார்

வெங்காயம் செய்யும் விவசாயியுடன் பேட்டி

கீரிமலைச் சுரங்கம்

செங்கை ஆழியான் ஆராய்ந்து எழுதுகிறார்,

பசும் புல்லில் ஒரு பச்சைக்கிளி

அ. செ. மு வின் வெள்ளி மல்லிகை:

சுநாதனின்

மன வியாதி-2

பாம்புக்குப் பால் வார்க்கும் நாகபஞ்சமி

தண்ணீர் ஆவியாவதைத் தடுக்க சிலவழிகள்,

கருத்தடை நன்மையா? தீமையா?

சிந்துவெளி நாகரிகம்,

ஆகியவைகளுடன் கலை அரங்கம், மாணவர்மலர் பஞ்சாமிர்தம் மற்றும் வழமையான அம்சங்களும் உங்களுக்கு விருந்தளிக்கக் காத்திருக்கின்றன.



இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org